எழுகதிர்
ELUKATHIR
ஐரோப்பிய பதிப்பு
Rs20 | Euro0.50
வாரஇதழ் | இதழ்: 40 | 07.05.2013

UNIVERSITY OF JAFFNA LIBRARY
07 JUN 2013
PERIODICALS DIVISION

## 60 அலகுகள் வரையில் மின்சாரம்: கட்டணத்தில் மாற்றம் இல்லை!

60 அலகுகள் வரையில் மின்சாரத்தைப் பயன்படுத்துவோரின் கட்டணத்தில் மாற்றம் கிடையாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.
180 அலகுகள் வரை மின்சாரத்தைப் பயன்படுத்துகி ன்றவர்களுக்கு குறிப்பிட்ட சதவீதத்தில் நிவாரணங்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
பூஜ்ஜியத்திலிருந்து 60 அலகுகள் வரையான பாவனைக்கான மின்சாரக் கட்டணங்கள் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பு: கூட்டமைப்பு வலியுறுத்து!

சர்வதேச கண்காணிப்புக்கு மத்தியிலேயே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் நேரில் கோரிக்கை விடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து அது நடைமுறைக்கு வரவேண்டும் என்றும் வலியுறுத்தியது.
வடக்குத் தேர்தலை முன்னிட்டு இவ்வாறானதொரு ஏற்பாடு செய்து கொடுக்கப்படாவிட்டால் அங்கு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டியது.
அதேவேளை, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளில் வாழும் இலங்கைப் பிரஜைகளுக்குத் தேர்தலில் வாக்களிப்பதற்கு விசேட திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும் எனவும் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.
தேர்தல் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய அரசியல் கட்சிகளின் செயலாளர்களை கடந்த வாரம் சனிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார். தேர்தல் செயலகத்தில் பிற்பகல் 3 மணியிலிருந்து 5 மணிவரை இந்தச் சந்திப்பு நடந்தது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஈ.பி. ஆர். எல்.எவ்வின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொண்டனர்

## ஐரோப்பிய தூதராக புதியவர் நியமனம்!



இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியாக டேவிட் டாலி நியமிக்கப்பட்டுள்ளார். டேவிட் டாலி தற்போது அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியாக கடமையாற்றி வருகின்றார்.
அசர்பைஜான், டொமினிக்கன் குடியரசு, ஹொண்டுராஸ், பரகுவே மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிப் பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளது.
ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத்துறைப் பொறுப்பாளர் கெதரான் அஸ்டனினால் இந்தப் புதிய நியமனங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நியமனங்களை குறித்த நாடுகளின் அரசாங்கங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கான பிரதிநிதியாக டேவிட் டாலியை அரசாங்கம் அங்கீகரித்தால் இந்த நியமனம் உறுதிப்படுத்தப்படும்.
ராஜதந்திர சேவையில் அனுப முதிர்சியும், திறமையும் மிக்கவர்கள் சில படிமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அஸ்டன் தெரிவித்துள்ளார்.

## சு.க.வேட்பாளர்கள் தனித்துவமாக இருப்பர்!

வடக்குத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற குடையின் கீழ் போட்டியிட்டாலும் அதன் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் குழுவானது தனித்துவமானதாக இருக்கும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
வடக்குத் தேர்தலில் முதற் தடவையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி பலமான முறையில் போட்டியிடுகின்றது.
இதுவரை காலமும் அவ்வாறான பலமான நிலைமை எமக்கு இருக்கவில்லை.
ஆனால் தற்போது சுதந்திரக் கட்சி வடக்கில் மக்கள் ஆதரவுடன் பலமாக உள்ளது என்றும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை (ஈபிடிபி) போன்று வடக்குத் தேர்தலில் மேலும் பல கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற் கொண்டு வருகின்றோம் எனவும் பஷில் கூறியுள்ளார்.
வடக்கு தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே முறுகல் நிலை நிலவி வருவதாக ஏற்கனவே செய்திகள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுநலவாய மாநாடு பிரிட்டனும் பங்கேற்கும்!

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமை நிலைமைகளை காரணம் காட்டி பல்வேறு தரப்பினர் மாநாட்டை

(11ம் பக்கம் பார்க்க)

# பொதுநலவாய இலங்கை மாநாடு: அவுஸ்திரேலியா ஆதரவு!




இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடத்துவதை தாம் ஆதரிப்பதாக தெரிவித்துள்ள அவுஸ்திரேலியா அதில் தாம் கலந்துகொள்வோம் என்றும் கூறியுள்ளது.
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை அமைச்சரான பிரண்டன் ஓ கொன்னர் அவர்கள் தற்போது இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.
இலங்கையின் வெளியுறவு அமைச்சரான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் உட்பட இலங்கை அரசாங்க பிரதிநிதிகள் பலரை சந்தித்து அவர் அங்கு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.
அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் தாம் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடப்பதை ஆதரிப்பதாகக் கூறியுள்ளார்.
அதேவேளை, இலங்கையில் சுபீட்சம் ஏற்படுவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமல்படுத்துவது என்ற அளவுகோலை இலங்கை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.
இலங்கை தனது பிராந்தியத்தில் எதிர்கொள்கின்ற ஒரு பெரிய சிக்கலான பிரச்சினையான, அகதிகள் விடயத்தை இரு நாடுகளும் மிகுந்த ஒத்துழைப்புடன் கையாள இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.இது விடயத்தில் இலங்கை தருகின்ற ஒத்துழைப்புக்கும் அவர் நன்றி கூறினார்.

## சட்டவிரோத படகுகளைத் தடுக்க இலங்கை ஆஸிக்கு உதவுகிறதாம்!

சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் செல்பவர்களைத் தடுப்பதில் இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் பிரன்டன் ஓ கோனர் தெரிவித்தார்.
சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியா வருவதைத் தடுப்பதற்கு பாலித் தீர்மானத்துக்கு அமைய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று வருவதாகவும், இலங்கையுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்புடன் செயற்பட விருப்பதாகவும்

(11ம் பக்கம் பார்க்க)

நட்புறவுடன் நாட்டைக் கட்டியெழுப்புவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாநகரசபை கட்டிட நிர்மாணப் பணிகள்

யாழ். மாநகர சபையின் புதிய கட்டிட நிர்மானப் பணிகளுக்கான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 200 மில்லியன் ரூபா நிதி கடந்த வாரம் செவ்வாய்கிழமை
கையளிக்கப்பட்டுள்ளது.இந்த நிதியினை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் அதாவுல்லாவினால் யாழ் மாநகரசபை முதல்வரிடம்
கையளிக்கப்பட்டுள்ளது
இந்த பணிக்காக 9,200 மில்லின் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் முதற்கட்ட பணிக்காக 200 மில்லியன் ரூபா
வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவை படிப்படியாக வழங்கப்படும் என்றும் யாழ் மாநர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

## செயலமர்வு

வட மாகாணத்திற்கான தேசிய உயிரியல் பல்வகைமை தொடர்பான செயலமர்வு யாழ். கோண்டாவிலில்அமைந்துள்ள சேவாலங்கா அலுவலகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.
சேவா லங்கா நிறுவனத்தினால் ஏற்பாடு செய்துள்ள மேற்படி நிகழ்வில் காட்டு மரங்களினை பாதுகாத்தல், மரம் அற்ற உற்பத்திப் பொருட்கள், வடக்கில் ஒவ்வொரு பல்வகைத்தன்மை தொடர்பாக ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.
குறித்த ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக சுற்றுப்புறச்சூழல் அமைச்சர் சுசில் பிறேமஜயந்த கலந்த கொண்டார்.
மேலும் வட மாகாண ஆளுநார் ஜப்.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாணம், வவுனியா உட்பட இலங்கையில் உள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்களும் இச்செயலமர்வில் கலந்து கொண்டனர்.

## கல்விமையக் கட்டிடம்

ஜேர்மன் நாட்டு நூரம்பக் நகர மற்றும் இலங்கைக்கான நட்புறவு அமைப்பின் நிதியுதவியுடன் காத்தான்குடி முதலாம் குறிச்சியில் நிர்மாணிக்கப்பட்ட இஸ்லாமிய இளைஞர் முன்னணியின் கல்வி மையக் கட்டிடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.
சுமார் நான்கு மில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட இந்த கட்டிட திறப்பு விழாவில் ஜேர்மன் நாட்டு நூரம்பக் நகர சர்வதேச நிறுவனத்தின் முக்கியஸ்த்தர்களான கலாநிதி நோபட் ஸ்க்கேஜர்ஸ், கலாநிதி அல்றய்க் ஸ்கோன்பெக், மற்றும் ஜேர்மன் நாட்டு நூரம்பக் நகர மற்றும் இலங்கைக்கான நட்புறவு அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி பஹ்மி இஸ்மாயில், கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபீர் காத்தான்குடி இஸ்லாமிய இளைஞர் முன்னணியின் தலைவர் பி.எம்.எம்.மர்வக் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
காத்தான்குடி முதலாம் குறிச்சி வாவியோரம் நிர்மானிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய இளைஞர் முன்னணியின் கல்வி மைய்யக் கட்டிடத்தை திறந்து வைத்த பின்னர் இங்கு; அன்பளிப்புச் செய்யப்பட்ட கணணி வகுப்பையும் இவர்கள் பார்வையிட்டனர்.
இங்கு நிர்மானிக்கப்பட்டுள்ள இந்த கல்வி மைய்யக் கட்டிடத்தில் சிறவர் பாடசாலை மற்றும் கணணி வகுப்பு, சிறுவர் பூங்கா என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## 13 ஆண்டுகளின் பின்னர் திறக்கப்பட்ட பாடசாலை

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகமாலையில் 13 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலையை பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. இதயராஜா ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.



26.03.2000 ஆண்டு காலப்பகுதியில் முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான மோதல்களை அடுத்து இந்தப் பகுதியிலிருந்த மக்கள் முழுமையாகவே இடம் பெயர்ந்திருந்தனர். இதனையடுத்து, இங்கிருந்த பாடசாலையும் தாக்குதலில் சிக்கி முழுமையாக அழிந்து விட்டது. பின்னர் நீண்ட காலமாக முகமாலைப் பிரதேசம் இருதரப்புக்கும் இடையிலான மோதல் பிரதேசமாகவும் வனியப் பிரதேசமாகவும் இருந்தது. தற்போது கண்ணிவெடிகள் அதிகமுள்ள பிரதேசமாக காணப்படுகிறது. இந்த நிலையில் கண்ணி வெடி அகற்றப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட முகமாலையின் வடபகுதியிலுள்ள போந்தர்குடியிருப்பு என்ற இடத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகையில் முகமாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் மீள ஆரம்பமாகியுள்ளது. பாடசாலையின் சொந்தக் காணி இன்னும் கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசமாக உள்ளதால், அங்கே கண்ணி வெடிகள் அகற்றப்படும்வரையில் இந்தத் தற்காலிக அமைவிடத்திலேயே பாடசாலை இயங்கும் என பிரதிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

## வடதாரகை கப்பல் சேவை



யாழ். குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவுக்கு ஆகிய பிரதேசங்களுக்கு இடையேயான வட தாரகை கப்பல் சேவை மீண்டும் கடந்த வாரம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நயினாதீவு நாக விகாரையின் பௌத்த பீடாதிபதியின் பிரித்தோதும் வைபவத்துடன் வட மாகாண கடற் படைகளின் கட்டளைத்தளபதி ரியல அட்மிரர் டி.எஸ்.உடவத்த மறறும் யாழ் மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரினால் இந்த கப்பல் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது
குறிகட்டுவான் துறைமுகத்திலிருந்து 75 பயணிகளுடன் வட தாரகை கப்பல் சேவையின் பயணம் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# எண்ணப்பட்டு வரும் கூட்டமைப்பின் ஆயுட்காலம்!

தமிழ் மக்களின் தேவைகள், உரிமைகள், பாதிப்புக்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுப்புகின்ற கோரிக்கைகள் தொடர்பான செய்திகள் வெளிவருவதற்குப் பதிலாக, தமிழ்க் கூட்டமைப்பே அண்மைக் காலமாக செய்தியாகிவருகின்றது.

கூட்டமைப்புக்குள் பிளவு, கூட்டமைப்பை பதிவுசெய்யக் காலக்கெடு, கூட்டமைப்புக்குள் கருத்துவேறுபாடு எதுவுமில்லை, இப்படியாகத்தான் அண்மைக்கால செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யவேண்டும் என்பதில் அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்துமே ஒத்தகருத்தில் இருக்கின்றன. விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களின் அரசியல் கட்சிபோலவே செயற்பட்டது. அதன் பாராளுமன்றக் குழுக்கூட்டம் கூட தமிழ்ச் செல்வன் முன்னிலையில் வன்னியிலேயே பல தடவை நடைபெற்றது. தமிழ்ச் செல்வன் சொல்வதைச் செய்வதற்கும் அவர்கள் சொல்வதை பேசுவதற்கும் மட்டுமே அப்போது கூட்டமைப்பினரால் முடிந்தது.

புலிகள் இருக்கும் வரை கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எவ்) ஆகியன இடம்பெற்றிருந்தன. கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது தமிழ்க் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டதன் காரணத்தால் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் மாத்திரம் எஞ்சியிருந்தன. நானே மூத்த அரசியல்வாதி, என்னை எப்படியும் தமிழ் மக்கள் மறந்துவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் கடந்த தேர்தலில் போட்டியிட்டு இரண்டாயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்ற சங்கரி ஐயாவும், வவுனியாவில் எப்படியும் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்று விடலாம் என்று நம்பியிருந்த சித்தார்த்தனும் இனியும் தனித்து நின்று அரசியல் செய்தால் தேற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டதால் வேறு வழியின்றி பின்னர் கூட்டமைப்பில் இணைந்து கொண்டதால் கூட்டமைப்பில் இப்போது ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. சங்கரி ஐயாவின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சித்தார்த்தனின் புளொட்டும் கடைசியாக கூட்டமைப்பில் சேர்ந்துகொண்டாலும், அழையா விருந்தாளிகள போல கடைசி வரிசையில் உட்கார வைக்கப்பட்டுள்ளனர். தனித்து விடப்பட் டவர்கள் போல அவர்கள் இருவரும் காத்திருக்க, கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் கண் வைத்திருக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரனும், அதற்கான காய்நகர்த்தல்களில் நீண்டகாலமாக ஈடுபட்டுவருகின்றார்.

கூட்டமைப்பு என்பது பெயருக்கு ஐந்து கட்சிகளின் கூட்டணி என்றாலும் தமிழரசுக்கட்சியே அதன் அனைத்துமாய் வியாபித்து நிற்பது மற்றைய நான்கு கட்சிகளுக்கும் எரிச்சலூட்டுகின்ற விடயம்தான்.அதனால்தான் மற்றைய கட்சிகள் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கு முண்டியடிக்கின்றன. தமிழரசுக கட்சியின் கை கூட்டமைப்பில் மேலோங்கி வருவதை சகித்துக்கொள்ளமுடியாத சில சக்திகள் அண்மைக்காலமாகவே அதற்கு எதிராக காய்நகர்த்தி வருகின்றன. தமிழரசுக் கட்சி என்பது எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்ற ஒரு கிறிஸ்தவரால் தொடங்கப்பட்டிருந்தாலும் அது என்னவோ யாழ்ப்பாண இந்து வேளாளத் தமிழர்களின் கட்சியாகவே இதுவரை செயற்பட்டு வந்திரு க்கின்றது. அதனால் தான் அது சிவில் சமூகம் என்ற பெயரில் அவ்வப்போது மன்னார் ஆயர் தலைமையிலான குழுவினரால் தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றது. கடந்த ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற ஐநா மனித உரிமை கூட்டத்தொடாருக்கு செல்லாததற்கு இந்த சிவில் சமூகம் நேரடியாகவே கண்டன அறிக்கையை வெளியிட்டிருந்தது. இப்போது மீண்டும் கூட்டமைப்பை பதிவுசெய்ய வலியுறுத்தி வருவதுடன், அது தொடர்பாக அண்மையில் சம்பந்தன் அவர்களையும் சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்தியிருந்தது. அதற்கு சம்பந்தன் தெரிவித்திருந்த பதில் பலரையும் புருவத்தை உயர்த்த வைத்ததுடன், அவர்களை சினம் கொள்ள வைத்திருக்கின்றது. கூட்டமைப்பில் முன்னாள் ஆயுதக்குழுக்கள் இடம் பெற்றிருப்பதால் அதனை பதிவுசெய்ய முயற்சிக்கும் போது அரசாங்கம் அதனை நிராகரிக்கலாம் என்று சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கள் சமாதானத்திற்குச் சென்ற மன்னார் ஆயரையே ஆத்திரப்படுத்தியிருக்கின்றது என்பது அண்மைக் கால நிகழ்வுகளிலிருந்து உணர முடிகின்றது.

மன்னாரில் கூட்டமைப்பின் பெயரில் தனியாக நடந்த மேதின வைபவம் மன்னார் ஆயரின் ஆசியுடனேயே நடைபெற்றதாக கூறப்படுவதிலிருந்து கூட்டமைப்பு எங்கே போகி ன்றது என்பது தெரியவந்திருக்கின்றது. புலிகளால் புலிகளுக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆயட்காலம் எண்ணப்பட்டு வருவதாகவே தெரிகின்றது.

# பிள்ளையான்: 'அதிகாரப் பகிர்வினூடாக மாகாண சபையை பலப்படுத்துவோம்!'

இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் அதிகாரப் பகிர்வினூடாக மாகாண சபையை பலப்படுத்தி அதன் மூலம் சிறுபான்மையினத்தவரின் அரசியல் அதிகாரங்களும் கிடைக்க வழி ஏற்படுத்த ப்பட வேண்டும். இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.


தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் அனுஷ்டிக்கப்பட்ட மேதின நிகழ்வின்போது உரையாற்றும் போது அவர் இந்த கருத்தினை தெரிவித்துள்ளார்.

'கிழக்கு வாழ் தமிழ் மக்களின் தனித்துவமான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது தொழிலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வினை மக்களோடு மக்களாக ஒன்றுசேர்ந்து அனுஷ்டித்து வருகின்றது.

அந்தவகையில் கிழக்கில் அபிவிருத்திப் பணிகளுக்காக அரசுடன் ஒன்று சேர்ந்திருந்தபோதிலும், கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அதிகாரங்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும் கட்சி என்பதை நாம் நிரூபித்து வருகின்றோம்.

இலங்கையில் 13 ஆவது அரசியல் திருத்தத்தினூடாக தோற்றம்பெற்ற மாகாண சபை முறையமையானது சிறுபா ன்மை சமூகத்தினரின் அரசியல் அதிகார த்தினை ஓரளவிற்காவது வழங்குகின்ற ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது. இந்த மாகாண சபை முறைமையானது அதிகாரப் பரவலாக்கத்தினூடாக வலுப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்கள் திருப்தியடையக்கூடிய குறைந்தபட்ச தீர்வு என்றால் அதிகாரப் பகிர்வு முறைமையின் வாயிலான 13ம் திருத்தத்தின் ஊடான மாகாண சபை முறைமையே தவிர வேறொன்றும் இல்லை. இதனைத்தான் எமது கட்சி இன்று வலுயுறுத்தி நிற்கின்றது.




அத்துடன் இலங்கையில் சில பேரினவாத சிந்தனை கொண்ட கட்சிகள் இன்று தமது அரசியல் சுயலாபத்திற்காக இனவாதத்தையோ, மதவாதத்தையோ கக்குகின்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது.

அதுமட்டுமன்றி குறைந்த பட்ச அதிகாரத்தையாவது வழங்கும் மாகாண சபை முறைமைக்கு வித்திட்ட 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தினை இல்லாதொழிப்பதற்குரிய கோசங்களை எழுப்பி வருகின்றன.

ஆனால் அவற்றையெல்லாம் அரசு ஜனநாயக முறையில் அணுகுவதுடன், இலங்கையின் சிறுபான்மையினங்களின் அரசியல் அதிகாரங்கள் தொடர்பில் இத்தகைய பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது' எனவும் அவர் தெரிவித்தார்.

# சக்தி வளத்துறையில் ஜப்பான் இலங்கைக்கு ஒத்துழைப்பு

சக்தி வளத்துறையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என ஜப்பான் அறிவித்துள்ளது.



காத்திரமானதும் வினைத்திறானதுமான சக்தி வளங்களை உற்பத்தி செய்ய உதவிகள் வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானின் பிரதிப் பிரதமர் டாரோ அசோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். பொருளாதாரம் மற்றும் முதலீட்டுத்துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் கூடுதல் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதியும், ஜப்பான் பிரதிப் பிரதமரும் இணங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது

பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஜப்பான் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்டுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# பொதுநலவாய மாநாடு: நியூசிலாந்து பங்கேற்கும்!

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்கப் போவதாக நியூசிலாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது.



அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் கீ இதனை உறுதி செய்துள்ளார். பிரித்தானியா மஹாராணி அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் இலங்கை அமர்வுகளில் பங்கேற்பார் எனவும், இந்த அமர்வுகளில் பங்கேற்க வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளை திருத்திக் கொள்வதற்கு இலங்கை முயற்சித்து வருவதாக நியூசிலாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த அமர்வுகளில் பங்கேற்கப் போவதாக அவுஸ்திரேலியாவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்பது தொடர்பில் உறுப்பு நாடுகளுக்கு இடையில் முரண்பாட்டு நிலைமை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், இதுவரையில் எந்தவொரு உறுப்பு நாடும் அமர்வுகளை முழுமையாக புறக்கணிக்கப்பதாக உத்தியோகபூர்வ பகிரங்க அறிவிப்பை வெளியிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lion Air flight 602 salvaged

The wreckage of Lionair Flight 602 has been salvaged off Iranaitivu by the Navy, 15 years after it went missing.

Following investigations launched by the police Terrorist Investigations Department, parts of the



wreckage including engine parts and the wheels of the plane were salvaged.

"We pulled out several parts yesterday (Saturday) and by this evening we hope to remove the rest," Navy spokesman Kosala Warnakulasuriya told the Colombo Gazette.

The wreckage of the passenger flight, believed to have been shot down by the LTTE in September 1998, killing 48 passengers and 7 crew members, had been found last October.

Based on information provided by an LTTE cadre in police custody, a Navy diving team located the wreckage on the sea bed off Iranativu Island.

The passenger plane went missing soon after takeoff from Jaffna on 29 September 1998 and was not found since.

The suspect in custody had identified the person who ordered the aircraft shot down as one Gadafi, a close associate of LTTE leader Velupillai Prabhakaran. Gadafi was killed during the final phase of fighting on the Vanni east front in early 2009.

Several attempts to salvage the wreckage since last October had failed as a result of poor weather.

But this weekend Navy divers managed to bring to the surface some of the parts which will now be sent for investigations.

**(Courtesy : Colombo Gazette)**

# Ananda Sangaree slams TNA



The issue of registering Tamil National Alliance as a separate political party with the department of elections hots up and the seething discontent which gradually emerged, has now blown-up openly, as Mr. V.Anandasangary demands for the immediate registration.

Mr. V.Anandasangary, a veteran Tamil Leader and the President of the Tamil United Liberation Front, which was in 1974 succeeded the Ilankai Tamil Arasu Kadchchi.

The TULF leader maintained that Late SJV Chelvanaykam the founder and leader of the Ilankai Tamil Arasu Kadchchi up to 1974, closed it down and launched to Tamil United Liberation Front

He alleged that in 2004 during the Parliamentary general elections clandestinely pumped in live to Ilankai Tamil Arasu Kadchchi and this manoeuvring was stealthily handled by LTTE stalwart Tamilselvan.

He further said for the last 21/2 yeas, Ilankai Tamil Arasu Kadchchi has ridden on 'our shoulders' and now they are coming up with all sorts of silly excuses, which are unacceptable.

It should be noted that since of late, all the four constituent political parties in the TNA were coming up with demand for the registration of the TNA as a separate political party and Mr. R. Sampanthan and other leaders of the Ilankai Tamil Arasu Kachchi have failed to come up with any action regarding the registration of a separate political party.

This seeming reluctance on the part of the leadership of the Ilankai Tamil Arasu Kachchi has angered leaders of the constituent parties of the TNA.

Already the leader of the EPRLF Mr. Suresh Premachandran has demanded openly for the registration of TNA as a political party.

The TELO has recently gone one step more by resolving in their recent central committee meeting for the registration.

Now Mr. V.Anandasangary has demanded for the registration of the TNA as a separate political party forthwith.

Given below the excerpts of the interview *Asian Tribune* had with Mr. V.Anandasangary:

When Mr. Anandasangary responding to *Asian Tribune* told:

"From the time the results of the last parliamentary elections were announced, Mr. R. Sampanthan made a request to all Tamil political parties to join together.

The TULF although initially opposed to that suggestion, because TNA had no mandate in the last parliamentary elections with only 63,000 votes in the Jaffna electoral district, which had a total strength of 700,000 voters.

Subsequently, due to the pressure from the Tamil public, TULF agreed to join them and for the last 2 ½ years we have been campaigning to TNA candidates at all level elections on the assumption that TNA will be registered as a political party.

After having ridden on our shoulders for the last 21/2 years and now they are coming out with silly excuses for their failure to register TNA as political party and these excuses cannot be acceptable . It is a well-designed act of procrastination.

I am keeping quiet because still one section of the Ilankai Tamil Arasu Kachchi is accusing me of campaigning for the registration of the TNA as a political party to enter parliament.

Though those Ilankai Tamil Arasu Kadchchi members run a smear campaign against me, I demand that TNA should be registered forthwith without any further delay - Mr. V.Anandasangary demanded.

(Courtesy- Asian Tribune)

# British PM to attend Commonwealth summit in Sri Lanka

British Prime Minister and Foreign Secretary William Hague will attend the Commonwealth Heads of Government Meeting (CHOGM) in Sri Lanka in November, the Sri Lankan External Affairs Ministry announced on Sunday.

The announcement came even as Canadian Prime Minister Stephen Harper said he may boycott the event over human rights concerns in Sri Lanka.



Sri Lanka has been accused of committing human rights abuses during the final stages of the war against the Tamil Tiger rebels before the rebels were defeated in May 2009.

Sri Lanka's High Commissioner to Britain Chris Nonis however said that Sri Lanka enjoys strong support amongst the Commonwealth countries, represented by the Board of Governors of the Commonwealth Secretariat. He also recalled the unwavering support of all except one country, at recent meetings, which he said necessitates a depth and breadth of understanding that Commonwealth countries are at different stages of development, with a commonality of values and aspirations, as well as challenges and constraints.

The Commonwealth biennial meeting in Sri Lanka in November this year will be preceded by the Commonwealth People's Forum, the Commonwealth Youth Forum, and the Commonwealth Business Forum, and usually attracts several thousand delegates, and global media coverage.


It will provide the opportunity for the 54 heads to meet to discuss matters of global and Commonwealth concern, and agree collective policies and initiatives, the Sri Lankan External Affairs Ministry said.

Nonis said in the statement that although there had been intensive lobbying in the past year by anti-Sri Lanka activist groups with "collateral agendas," in particular in London, which is home to the Commonwealth Secretariat, they had not succeeded in their attempts to pressurize Commonwealth nations to shift the venue.


(Courtesy : http://news.xinhuanet.com)


## JVP participation in french may day rally 01.05.2013




## Socialist Progressive Front in Paris May day rally 01.05.2013








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தொழிலாளர்களே ஒன்று சேரும் நாளில் கன்னை பிரிந்து நின்ற கூட்டமைப்பினர்



கிளிநோச்சி



மன்னார்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளக முரண்பாடுகள் இதுவரை காலமும் நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருந்தது. நடந்து முடிந்த மே தினம் அந்த உள்ளக முரண்பாடுகளை வெளி உலகிற்கு அம்பல படுத்தி இருக்கின்றது.தமிழ் தேசியக்கூட்ட மைப்பின் பதிவு தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாக இவ்வாண்டின் மேதின நிகழ்வுகள் கூட்டமைப்பின் பெயரில் இருவேறு இடங்களில் இடம் பெற்றிருக்கின்றது." உலக தொழிலா ளர்களே ஒன்று சேருங்கள்"என்று கோசமிடவேண்டிய நாளில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கிளிநோச்சியில் ஒன்றும் மன்னாரில் மற்றொன்றுமாக கன்னை பிரிந்து நின்று மேதின நிகழ்வுகளை 'வழக்காடு மன்றமாக மாற்றி இருக்கின்றனர். எட்டு நாட்களுக்குள் தேசியக்கூட்டமைப்பினை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்ய உடன்படவேண்டும் என்பது டெலோ தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற இடம்பெற்ற மே தின செய்தியாக வெளிவந்தி ருக்கிறது.குறித்த கூட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,எஸ்.வினோ நோகராத லிங்கம்.சிவசக்தி ஆனந்தன். மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி,போன்றோர் பங்கெடுத்தனர்.

அதேவேளை கிளிநொச்சியில் இடம் பெற்ற தமிழரசு கட்சியின் தலைமையிலான மே தின நிகழ்வில் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா தொடங்கி மட்டகளப்பு மாவட்ட தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈறாக அனைவரும் கலந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் தமிழரசு கட்சியின் தலைவர் சம்பந்தன் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.கடந்த ஆண்டு மேதின கூட்டத்தில் சிங்கக்கொடியை ஏக்கி சங்கடத்தை ஏற்படுத்தியது போல் ஏடா கூடமாக ஏதும் நடந்துவிடகூடாது என்பதாலோ என்னவோ தமிழரசு கட்சியின் தலைவர் சம்பந்தன் இல்லாமலேயே கிளிநொச்சியில் இடம் பெற்ற தமிழரசு கட்சியின் தலைமையிலான மே தின நிகழ்வு இடம்பெற்றிருக்கிறது.

இவை அனைத்தும் ஒருபுறமிருக்க தங்கள் கட்சி பிரச்சனைக்கே இதுவரை காலமும் ஒரு தீர்வை காணமுடியாத இந்த தலைவர்கள் எப்படி இலங்கைத்தமிழரின் தேசிய பிரச்னைக்கு முடிவுகாண போகி றார்கள்? சுமார் பத்து ஆண்டுகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எனும் குடையின்கீழ் செயற்பட்டுவரும் இக கட்சிகள் அக்கூட்டமைப்பினை ஏன் இதுவரை பதிவு செய்ய முடியாதுள்ளது? அப்படி என்னதான் தடை இவர்களுக்கிடையே? பலரும் சொல்வதுபோல் தலைமைபோட்டி மட்டுமே இதற்கு காரணமாக இருக்க முடியும். இதன் காரணமாக தமிழ் மக்க ளை நோக்கி இவர்கள் போடும் ஒற்றுமை கோஷம் போலியானது.தேர்தலையும் பதவிகளையும் எதிர்கொள்வதற்காக மட்டுமே இவர்கள் ஒற்றுமை வேஷம் போடுகிறார்கள் என்கின்ற குற்ற சாட்டுக்கள் இந்த மே தின நிகழ்வுகளோடு மேலும் மக்களின் மனதில் வலுப்பெற தொடங் கியுள்ளன.

"எக்காரணத்துக்காக எக்காரியம் நடைபெறுகின்றதோ அக்காரணம் இல்லாமல் அக்காரியமில்லை" என்கின்ற இயங்கியல் விதியின் அடிப்படையில் இனி கூட்டமைப்பு தேறாது என்பதை முன் னுணர முடிகின்றது.தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுதலை புலிகளுக்காகவே உருவாக்கப்பட்டதே இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பாகும். மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட தலைவர்களுடாக தமது எண்ணங்களை பிரதிபலிப்ப தற்காகவே இக்கூட்டமைப்பு புலிகளால் உருவாக் கப்பட்டது.ஆகவேதான் புலிகள் இல்லாது போனதோடு கூட்டமைப்பினரின் ஒற்றுமை போலி என்பது அம்பலமாக தொடங்கி யிருக்கின்றது. மாறாக இல்லை நாம் மக்களுக்காக ஒன்றாக செயற்படுகின்றோம் என்று கூட்டமைப்பினர் நிரூபிப்பதாயின் தமிழ் தேசிய ஒற்றுமை என்பதை நடைமுறையில் காட்ட வேண்டும். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற டெலோ ,ஈ .பி.ஆர்.எல்.எப் மற்றும் த.வி.கூட்டணி போன்ற கட்சிகளுக்கு சம அந்தஸ்து கொடுத்து கூட்டமைப்பை ஒரு புது அரசியல் கட்சியாக உடனடியாக பதிவுசெய்ய முன்வர வேண்டும்.அதை தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் தேர்தல் காலங்களில் மட்டும் எல்லா கட்சிகளையும் காட்டி தமது வாக்கு வங்கியை பெருக்கி கொண்டு "தமிழரசு கட்சியினர் எமது முதுகுகளில் சவாரி செய்கின்றனர் " என்று ஆனந்த சங்கரி இ சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றோர் முன்வைக்கும் குற்றசாட்டுக்கள் வலுபெற்று கொண்டேயிருக்கும்.

நமக்குள்ளேயே இப்படியான சின்ன சின்ன பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாத நாம் எப்படி மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்? இதுபற்றி வெகுஜன ஊடகங்கள் என்று சொல்லப்படுபவை கேள்வி எழுப்ப தொடங்க வேண்டும். கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது சம்பந்தர், சங்கரி, சித்தார்த்தன், அடைக்கலநாதன்,மாவை சேனாதி ராஜா போன்ற தலைவர்களின் ஒருமித்த படங்களை பிரசுரித்து மட்டகளப்பு மக்களுக்கு தமிழரின் ஒற்றுமை வேதம் ஓதிய பத்திரிகைகள் இப்போது வடமாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே கன்னை பிரித்து நின்று மே தினம் கொண்டாடும் லட்சணத்தை

**மட்டுநகரிலிருந்து**
**எழுகதிரோன்**

பார்த்தும் அடக்கி வசிப்பதன் சூட்சுமம் யாது?

கூட்டமைப்பை பல கட்சிகளின் ஒருமிப்பாக பதிவு செய்வதை இழுத்த டிப்பதற்கு நொண்டி சாட்டாக "ஆயுதம் தாங்கிய கரங்களுக்கு சொந்த காரர்களை வைத்து கட்சி பதிய முடியாது" என்று சொல்லுவது சம்பந்தரின் கயைமைத்த னமாகும் .அப்படிஎன்றால் அந்த புத்தி ஏன் இதுவரை காலமும் வரவில்லை? அடைக்கலமும் சுரேசும் இதுவரைகாலமும் எப்படி பாராளுமன்ற உறுப்பினர்களாக உலாவர முடிந்தது.மக்கள் அவர்களுக்கும் வாக்களித்தனர் என்பது பொய்யா? கிழக்கு மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட ஏறக்குறைய அனைவரும் (ஒரு சிலர் விதிவிலக்கு) முன்னாள் ஆயுததாரிகள் மட்டுமல்ல உச்சிமுதல் உள்ளங்கால் வரை சொந்த மக்களின் இரத்தகறை படிந்தவர்கள் என்பது சம்பந்தர் அறியாததா? எனவேதான் இந்த நொண்டிசாட்டுக்கள் காலத்தை இழுத்தடிப்பதற்கான முயற்சியே தவிர வேறில்லை. ஆயுதம் பற்றி இன்று கதைக்கின்ற சம்பந்தரும் தமிழரசு கட்சியும் எப்படி மூத்த ஆயுததாரி பிரபாகரனை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி என்று தேர்தல் கொள்கை அறிக்கை வெளியிட முடிந்தது? அதற்கும் அப்பால் அப்பாவி இளைஞர களின் கைகளில் ஆயுதங்களை திணிக்க முடிவெடுத்தவர்கள் யார்? இந்த தமிழரசுகட்சியினர் தானே? இவர்கள் முக்கிய பாத்திரம் ஏற்றதுதானே 1975ல் வட்டு கோட்டை தீர்மானம் நிறைவேற்றிய த.வி.கூட்டணி? இனவாதத்தை பரப்பி தேர்தல் வியாபாரம் செய்ய புறப்பட்டு. இளம் சமுகத்தை சூடாக்கி ஆயுததாரிகளாக மாற்றிவிட்டு,ஒரு பரம்பரையையே அழித்து ஏப்பம் விட்டுவிட்டு இன்று எதுமே அறியாதவர்களாக அகிம்சைவேசம் போடும் தமிழரசுகட்சி காலத்திற்கு ஒவ்வாதது. தமிழ் மக்களின் வரலாற்றினை ஒரு நூற்றாண்டு காலத்துக்கு பின்னிழுத்து சென்ற இந்த கட்சி இனிமேலும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவ படுத்தவோ மக்களுக்கு தலைமை தாங் கவோ தகுதியற்றது.

எனவே கூட்டமை ப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசு கட்சி தவிர்ந்த ஏனைய அமைப்புகள் இனிமேலும் காலத்தை கடத்தாது புதியதொரு கட்சியை பதிவுசெய்ய முன்வர வேண்டும்.

அதில் கூட்டமைப்பிற்கு வெளியே இருக்ககூடிய ஏனைய தமிழ் கட்சிகளையும் இணைத்துக் கொள்வது அவசியமாகும். இதில் நான் துரோகி ;நீ துரோகி என்கின்ற தேவையற்ற விவாதங்களை தவிர்த்து தமிழ் மக்கள் ஒரே குரலில் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்த கூடிய ஒரு மாற்று தலைமையை கட்டிஎழுப்ப முன்வர வேண்டும் அதுவே பலமான ஒரு வடமாகாண சபையை உருவாக்கு வாக்குவதற்கும் அதனை வழிநடத்துவ தற்கும் மிக சிறந்த பாதையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுகளற்ற அனைத்துலகச் சமூகம்!

தகவல் புரட்சி நாடுகளையும் கண்டங்களையும் திறந்து வருகின்றது. நிதி மூலதனமும் நாடுகளையும் கண்டங்களையும் திறந்து வருகிறது. தொழில நுட்பம் மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் அடிப்படையில் கூறின் உலகம் மேலும் மேலும் திறக்கப்பட்டு வருகிறது. இப்பொறிமுறைக்கு எதிராக நாடுகளையும் சமூகங்களையும் மூட



பலமாக இருந்தவரை தமிழ் மக்களின் அரசியல் எப்படி இருந்ததோ அப்படித் தான் இப்பொழுது சிங்கள மக்களின் அரசியலும் காணப்படுகிறது.

மேற்கு நாடுகள் இலங்கைத் தீவில் ஒன்றில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எத்தனிக்கின்றன அல்லது ஆட்சியாளர்கள் மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்த எத்தனிக்கின்றன. ஆனால், தேர்தல் வழிமுறைகளின் ஊடாகவோ அல்லது நாடாளுமனறத்துக்கு வெளியிலான நடவடிக் கைகளின் மூலமாகவோ இப்போது ஆட்சியிலிருக்கும் வம்சத்தை எளிதாக அசைத்துவிட முடியாது. ஏனெனில், இந்த அரசாங்கம், சிங்கள மக்களுக்கு பெற்றுக்கொடுத்த வெற்றியின் பிரமா ண்டம் அத்தகையது. நாடாளுமன்றத்து க்கு உள்ளேயும் வெளியேயும் இந்த அரசாங்கத்திற்கு சவாலாக எழக்கூடிய ஜனவசியம் மிக்க ஆளுமைகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. யுத்த வெற்றி வாதத்தின் இரும்புக் கோட்டையைத் தகர்த்து மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால் அதற்கு வெளியாரின் பின்பலம் வேண்டும்.

எனவே, இரும்புக் கோட்டையாக மூடப்பட்டுள்ள தென்னிலங்கை அரசியல் அரங்கினுள் ஊடுருவ மேற்கு நாடுகளாலும் முடியவில்லை. இந்தியாவாலும் முடியவில்லை. இதனாற்தான் ஆகக்குறைந்தது அரசாங்கத்தையாவது அவர்கள் கையாள வேண்டியிருக்கின்றது. கடந்த இரண்டு ஜெனிவா கூட்டத்தொடர்களின் போதும், கூட்டத்தொடர்களின் பின்பும் இதுதான் நடந்தது.

மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவிற்கும்

**இந்த அரசாங்கம் தரக்கூடியதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தமிழர்கள் கேட்பதை இந்த அரசாங்கம் கொடுக்கப்போவதுமில்லை. தன் சொந்த வெற்றிச் சிறைக்குள்ளிருந்து வெளிவர முடியாத ஓர் அரசாங்கத்திற்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே போராடத் தேவையான திடசித்தமோ தீர்க்க தரிசனமோ தியாக சிந்தனையோ அதற்குரிய பாரம்பரியமோ படைப்புத் திறனோ கூட்டமைப்பிடம் இருப்பதாகத் தெரியவில்லை.**

முற்படும் அரசாங்கங்களோ அல்லது அமைப்புக்களோ இப்பொறிமுறையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்படும் நாடுகளோடு அல்லது நாடுகளின் கூட்டமைப்போடு மோத வேண்டிவரும்.

இலங்கைத் தீவைப் பொறுத்த வரை விடுதலைப்புலிகள் பலமாக இருந்த வரை தமிழ் மக்களின் அரசியலானது மூடப்பட்டிருந்தது. விடுதலைப்புலிகளை மீறி யாரும் அதைக் கையாள முடிந்ததில்லை. அதற்குள் ஊடுருவவும் முடிந்ததில்லை. அதாவது, விடுதலைப்புலிகள் பலமாக இருந்த வரை தமிழ் மக்களின் அரசியலானது ஒரு இரும்புக் கோட்டையைப் போல மூடப்பட்டதாகக் காணப்பட்டது. ரணில் - பிரபா உடன்படிக்கை காலத்தில் இக்கோட்டையைத் திறந்து விடுதலைப் புலிகளை நெகிழச் செய்து தமது வழிக்குக் கொண்டுவர மேற்கு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அது நடக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிப்பது என்ற முடிவை எடுத்ததன் மூலம் விடுதலைப்புலிகள் மேற்கு நாடுகளின் முயற்சிகளுக்கு வரையறைகளை ஏற்படுத்தினர்.

எனவே, விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பது என்ற முடிவை ஏறக்குறைய எல்லா நாடுகளும் எடுத்தன. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதோடு தமிழ் மக்களின் அரசியல் திறக்கப்பட்டு விட்டது. ஆனால், சிங்கள மக்களின் அரசியல் அரங்கு மூடப்பட்டுவிட்டது. நந்திக் கடலில் தோற்கடிக்கப்பட்டது விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டும் அல்ல. இலங்கைத் தீவில் அரசாங்கத்திற்கு எதிராகக் காணப்பட்ட அனைத்து எதிர்ப்புச் சக்திகளும் தோற் கடிக்கப்பட்டு விட்டன. அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு வெளி என்பதே இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. இந்த அரசாங்கத்தை விட தீவிர தேசிய சக்தி எதுவும் நாட்டில் இப்பொழுது இல்லை. யுத்த வெற்றிவாதத்தின் மீது சிங்கள மக்களின் அரசியல் கட்டியெழுப்பட்டுவிட்டது. வெற்றியின் உச்சிக் கோபுரத்தில் ஆட்சியாளர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். வெற்றிக் கோட்டையைத்தாண்டி யாரும் உள்நுழைய முடியாது. விடுதலைப்புலிகள்

ஆனால், எவ்வளவுக்கு எவ்வளவு வெளிச்சக்திகள் அரசாங்கத்திற்கு எதிரான தரப்புக்களை ஆதரிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சாதாரண சிங்கள பொதுசனங்கள் அரசாங்கத்தை



ஆதரிப்பார்கள். வெளி யாரின் உதவியோடு அரசாங்கத்தை எதிர்க்கும் எவரும் யுத்த வெற்றிவாதத்தின் முன் துரோகியாகவே கருப்படுவார். யுத்தத் தின்கிடைத்தற்கரிய வெற்றிகளை வெளி யாருக்குக் காட்டிக் கொடுக்கும் ஒருவராகவே அவர் பார்க்கப படுவார். யுத்த வெற்றி நாயகர்களில் ஒருவரான தளபதி சரத் பொன்சேகாவுக்கு இது தான் நடந்தது.

மூடப்பட்டுள்ள சிங்கள மக்களின் அரசியலுக்குள் உள்நுழைய முற்பட்ட குமார் குணரத்தினமும் தோல்வியோடு பின்வாங்க வேண்டியதாயிற்று. இப்பொழுது முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகாவைப் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆனால், இலங்கைத்தீவின் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்த வல்லதும் யுத்த வெற்றிவாதத்தை மீறி எழுமளவிற்கு ஜனவசியம் மிக்கதுமாகிய ஆளுமைகள் எதையும் உடனடிக்கு தென்னிலங்கை அரசியல் அரங்கில் காணமுடியவில்லை. குறைந்த பட்சம் ஒரு கதைக்காகவேனும் ஆட்சியாளரிடத்தில் மனமாற்றங்களை ஏற்படுத்தவல்ல ஒரு போதிசத்வரையும் காணமுடியவில்லை.

இலங்கைத்தீவில் இப்போது திறக்கப் பட்டுள்ள ஒரே கதவு தமிழ் அரசியல்தான். விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியோடு அது முற்றாகத் திறக்கப்பட்டுவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாகக் காணப்படுவது அதனுடைய அடிப்படைப் பலம். இது காரணமாகவே அது அனைத்துலக அரங்கில் விடுதலைப் புலிகளை விடவும் கூடுதலான அங்கீகாரத்தோடு காணப்படுகிறது. இது மற்றொரு பலம்.

ஆனால், ஒரு பொது இலட்சியத்தின் அடிப்படையில் தனக்குள் ஐக்கியப்பட முடியாத கட்சி அது. ஈழத் தமிழர்களின் அடுத்த கட்ட அரசியலை முன்னெடுத்துச்செல்லவல்ல தீர்க்க தரிசனமோ படைப்பாற்றலோ அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போதுள்ள அரசாங்கம் தனது சொந்த வெற்றியின் கைதியாக உள்ளது. வெற்றிச் சிறையை விட்டு வெளியே வந்ததாற்தான் இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிச் சிந்திக்கலாம். ஆனால், இந்த அரசாங்கம் வெற்றிச் சிறையை விட்டு வெளியே வரமுடியாது. ஏனெனில், அது எத்தகைய தீவிர தேசிய சக்திகளுக்குத் தலைமை தாங்குகின்றதோ அவற்றை மீறி தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்க முடியாது.

**- நிலாந்தன்**

எனவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பானது இந்த அரசாங்கத்திடமிருந்து தீர்வு எதையும் பெற முடியாது. இந்த அரசாங்கம் தரக்கூடியதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தமிழர்கள் கேட்பதை இந்த அரசாங்கம் கொடுக்கப்போவதுமில்லை. தன் சொந்த வெற்றிச் சிறைக்குள்ளிருந்து வெளிவர முடியாத ஓர் அரசாங்கத்திற்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே போராடத் தேவையான திடசித்தமோ தீர்க்க தரிசனமோ தியாக சிந்னையோ அதற்குரிய பாரம்பரியமோ படைப்புத் திறனோ கூட்டமைப்பிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

எனினும் எல்லாப் பலவீனங்களுக்கும் அப்பால் ரி.என்.ஏ.தான் இப்பொழுது தமிழ்த் தரப்பாகக் காணப்படுகிறது. மொட்டைக் கத்தி என்றாலும் உறைக்குள் இருப்பது அந்தக் கத்திதான். அமெரிக்காவும் இந்தியாவும் அதைத் தான் கையாள முடியும். மற்றது தமிழ் டயஸ்பொறா. டயஸ் பொறாவிலும் ஒற்றுமை இல்லை. ஒரு பொதுத் தமிழ் நிதியத்தை உருவாக்க முடியாத அளவிற்கும் ஒரு தமிழ் அறிவியல் நடுவத்தை கட்டியெழுப்ப முடியாத அளவிற்கும் சிதறிக் காணப்படும் ஒரு டயஸ்பொறா அது. அனைத்துலக அரங்கில் தமிழர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரப்பாக மேலெழ முடியாமைக்கு டயஸ் பொறாவிற்குள் காணப்படும் ஐக்கியமி ன்மையும் ஒரு முக்கிய காரணம். களத்திலும் புலத்திலும் ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனவசியம் மிக்க ஒரு தலைமைத்துவம் தமிழர்களுக்கு இப்பொழுது இல்லை. விடுதலைப்புலிகள் இருந்த வரை சரிகளோடும் பிழைகளோடும் களத்திலும் புலத்திலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தலைமைத்துவத்தை வழங்கினார்கள். இப்பொழுது அது வெற்றிடமாகவுள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்பவல்ல தீர்க்க தசரினமும் அரசியலில் படைப் பாற்றாலும் மிக்க பேராளுமைகள் மேலெழும் போதே அனைத்துலக அரங்கிலும் உள்நாட்டிலும் தமிழர்கள் கேள்விக் கிடமற்ற ஒரு தரப்பாக நிமிர முடியும்.

அத்தகைய பேராளுமைகள் அற்ற ஒரு வெற்றிடத்திலேயே இந்தியாவும் மேற்கு நாடுகளும் தமிழ் அரசியலை கையாள வேண்டியிருக்கிறது. இதனால், தமிழர்கள் தமது சொந்த நிகழ்ச்சி நிரலை சக்தி மிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரலோடு பொருந்தச் செய்வதற்குப் பதிலாக சக்தி மிக்க நாடுகளின் கருவிகளாகவோ அல்லது அழுத்தக் குழுக்களாகவோ அல்லது அரசியல் நொதியங்களாகவோ சுருங்கிப் போகும் ஆபத்தும் உண்டு.

எனவே, மேற்கண்டவைகளைத் தொகுத்துக் கூறின் இலங்கைத்தீவில் மேற்கு நாடுகளையும், இந்தியாவையும் பொறுத்த

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதிகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாது அரசாங்கம் திட்டமிட்டபடி வட மாகாணசபைத் தேர்தலை நடாத்த வேண்டும்!

**வி.சின்னத்தம்பி (யாழ்ப்பாணம்)**

வட மாகாணசபைத் தேர்தலை இவ் வருடம் செப்டெம்பர் மாதம் நடாத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகளிடையே அது பற்றிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த வருடம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலைக் கோட்டை விட்டு விட்டதால், வட மாகாணசபையை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் இருக்கிறது.

அதேபோல ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் என்னவிதப்பட்டும் வட மாகாணசபைத் தேர்தலில் தாம் வெற்றியீட்டிவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றது. குறிப்பாக ஆளும் கூட்டணியின் வட பகுதிப் பிரதான பங்காளிக் கட்சியான ஈ.பி.டி.பி, இதில் அதீத கரிசனையுடன் செயற்படுகிறது. அக்கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்தேர்தலில் தான் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடப் போவதாகப் பல தடவைகள் அறிவித்து விட்டார்.

இது ஒருபுறமிருக்க, தென்னிலங்கையில் உள்ள கடும்போக்கு சிங்கள இனவாதக் கட்சிகளான அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் ஜாதிக ஹெல உருமய, அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்பன வட மாகாணசபைத் தேர்தலை நடாத்தக்கூடாது என போர்க்கொடி னக்கியுள்ளனர்.


அதற்கு அவர்கள் கூறும் காரணம், வட நடாத்தக்கூடாது எனக் கூறுவது அர்த்தமற்ற வாதமாகும்.

வட மாகாணசபைத் தேர்தல் நடந்து அங்கு ஒரு நிர்வாகம் ஏற்பட்டாலும், அது ஏனைய மாகாணசபைகளை விட பிரத்தியேகமானதாக இருக்கப் போவதில்லை. ஏனைய 8 மாகாணசபைகளைப் போலத்தான் அதுவும் செயற்படப் போகின்றது. மாகாணசபைகளுக்கு என 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் எக்காரணம் கொண்டும் எந்தவொரு மாகாணசபைகளுக்கும் வழங்கப் படமாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அறிவித்துவிட்ட பின்னர், இந்தச் சிங்கள இனவாதிகள் கூச்சல் போடுவதில்




இதன் காரணமாக தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த நம்பிக்கையீனத்தை வழமை போல, பிற்போக்கு தமிழ் தலைமைகள் (தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்றவை) நன்கு பயன்படுத்தி வருகின்றன. வரலாறு முழுவதும் ஆக்கபூர்வமான வாக்குறுதிகளை வழங்கி வாக்குக் கேட்காது, அரசாங்கம் விடும் தவறுகளையே சொல்லிச் சொல்லி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அரசியல் சவாரி செய்துவரும் தமிழ் தலைமைகளுக்கு அரசாங்கமே மெல்லுவதற்குத் தீனி போட்டால் அவர்கள் சும்மா இருப்பார்களா?

அதுமாத்திரமல்ல, தமது நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் இருக்க, இலங்கைத் தமிழர் பிரச்சினையை வாக்குச் சேகரிப்பதற்கான ஒரு வழிமுறையாகக் கண்டு பிடித்துள்ள தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் (வலது, இடது எல்லாமே), இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்காமல் இழுத்தடித்து வருவதைப் பயன்படுத்தி, அங்குள்ள பொது மக்க



உண்மை. இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு அதற்குத் தீர்வு காணாதவரை, இலங்கையில் உண்மையான தேசிய நல்லிணக்கமும் சமாதானமும் ஒருபோதும் ஏற்படப் போவதில்லை.

சிங்கள மக்கள் நாட்டின் பெரும பான்மையினர் என்பது உண்மையாயினும், நாட்டின் மூன்றிலொரு பங்கினரான சிறுபான்மை இனங்களை அரவணைத்துப் போகாதவரை, இலங்கை தனது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னேற வாய்ப்பில்லை. இதுதான் கடந்த 30 வருடப் போரில் இலங்கை மக்கள் அனைவரும் இரத்தம் சிந்திப் பெற்ற படிப்பினை. இந்தப் படிப்பினையை சிங்கள இனவாத சக்திகள் தவறாக விளங்கிக் கொண்டு, யுத்தம் முடிந்து விட்டபடியால், அதன் கருத்து சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியதில்லை என்பதுதான் என முட்டாள்தனமாக எண்ணினார்களானால், அது விபரீதமாகவே முடியும்.

எனவே அரசாங்கம் வட மாகாணசபைத் தேர்தலை நடாத்துவது என இப்பொழுது எடுத்துள்ள முடிவு ஆக்கபூர்மானதும், வரவேற்கப்பட வேண்டிதுமாகும். அதன் மூலம் இனங்களுக்கடையில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் கணிசமான ஒரு முன்னேற்றத்தைக் காண முடியும். எனவே அரசாங்கத்துக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ இருக்கும் சிங்கள இனவாதிகள் போடும் கூச்சலைக் கண்டு அஞ்சி, அரசாங்கம் முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்கக்கூடாது. அப்படி நடக்குமாயின் அது மீண்டுமொரு வரலாற்றுத் தவறாக அமைவதுடன், நாடு மீண்டும் இருண்ட காலகட்டத்திற்குள்

மாகாணசபைத் தேர்தல் நடந்தால் அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று, அதன் மூலம் அங்கு பிரிவினைவாத சக்திகள் தலையெடுத்து விடுவார்கள் என்பதாகும். ஆனால் இந்தக் கட்சிகள் ஏனைய 8 மாகாணசபைகளுக்கும் தேர்தல்கள் நடந்தபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காததுடன், அவற்றில் பங்குபற்றி, சில சபைகளில் பதவியும் வகித்து வருகின்றனர். எனவே வட மாகாணசபைத் தேர்தல் பற்றி அவர்கள் தெரிவிக்கும் அச்சம் அடிப்படையற்றதும், இனவாதத் தன்மையுடையதுமாகும்.

அவர்கள் முன்வைக்கும் காரணங்களின்படி பார்த்தால், புலிகளை முன்னர் ஆதரித்த அல்லது இப்போதும் தமிழ் தேசியவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளை அரசாங்கம் தடை செய்திருக்க வேண்டும். அக்கட்சிகளை பாராளுமன்றத் தேர்தலில்கூட போட்டியிட்டிருக்க அனுமதித்திருக்கக் கூடாது. கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்து, அங்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட போது எதிர்ப்புத் தெரிவிக்காத இவர்கள், வட மாகாண சபைத் தேர்தலின் போது மட்டும் கூச்சல் போடுவது எப்படி நியாயமாகும். அவற்றுக்கெல்லாம் அனுமதித்துவிட்டு, வட மாகாணசபைத் தேர்தலை மட்டும்

எவ்விதமான அர்த்தமும் இல்லை. குறைந்த பட்ச அதிகாரங்கொண்ட மாகாண சபைக்கான தேர்தலையே நடாத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், தமிழ் மக்களை இந்த நாட்டின் சம பிரஜைகளாக எப்படி ஏற்று நடாத்துவார்கள்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றுவிடும் என இவர்கள் அஞ்சுவதன் காரணம், வட பகுதி மக்கள் அரசாங்க அணியை ஒருபோதும் ஆதரிக்க மாட்டார்கள் என்ற அச்சத்தினால் என்பது இரகசியமானது அல்ல. புலிகளுடனான இறுதிப் போர் முடிந்து 4 ஆண்டுகள் ஆகிவிட்ட போதும், அரசாங்கம் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு

உருப்படியான தீர்வு எதனையும் காண முயற்சிக்கவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது. அதுமாத்திரமல்ல, அரசாங்கமும் ஜனாதிபதியும் காலத்துக் காலம் இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக வழங்கி வந்த வாக்குறுதிகளையும் ஊதாசீனப்படுத்தி வருகின்றனர்.

ளையும், மாணவர்களையும் தவறான பாதையில் வழி நடாத்தி, அங்குள்ள எரியும் பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப இலங்கை இனப் பிரச்சினையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இன்னொரு பக்கத்தில் ஆசியப் பிராந்தியத்தில் தமது ஆதிக்க மூலோபாயக் கொள்கையுடன் ஒத்துழைக்காத இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை காரணமாக, இலங்கை மீது வீண் பழி சுமத்தி அந்த நாட்டில் சமாதானமும், சுபீட்சமும் ஏற்படாமல் தடுப்பதற்கு முனைந்து நிற்கும் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகள், இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஓர் ஆயுதமாகக் கையிலெடுத்து செயற்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலை காரணமாக கடந்த காலங்களில் எவ்வளவு முரண்பாடுகள் இருந்தாலும், இலங்கையுடன் நட்புடன் செயற்பட்டு வந்த இந்திய மத்திய அரசாங்கமும்கூட, இன்று இக்கட்டான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே இன்று இலங்கை உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும், இக்கட்டான நிலைக்கும் அடிப்படைக் காரணம், அது இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாளும் விதம்தான் - அதாவது அந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் தட்டிக் கழித்து வருவதுதான் - என்பதே வெளிப்படையான

**சிங்கள மக்கள் நாட்டின் பெரும பான்மையினர் என்பது உண்மையாயினும், நாட்டின் மூன்றிலொரு பங்கினரான சிறுபான்மை இனங்களை அரவணைத்துப் போகாதவரை, இலங்கை தனது பிரச்சினை களுக்குத் தீர்வு கண்டு முன்னேற வாய்ப்பில்லை. இதுதான் கடந்த 30 வருடப் போரில் இலங்கை மக்கள் அனைவரும் இரத்தம் சிந்திப் பெற்ற படிப்பினை.**

பிரவேசிக்க வேண்டியும் வரும்.

முற்போக்கு - ஜனநாயக சக்திகள் வட மாகாணசபைத் தேர்தலை எப்படி எதிர்நோக்குவது என்பதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிற்போக்கு, தமிழ் இனவாத, பிரிவினைவாத நோக்கத்தை முறியடிக்க மக்களை எப்படி அணி திரட்டுவது என்பதும், தேர்தல் வியூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதும், தனியாக ஆராயப்பட வேண்டிய பிரச்சினை களாகும். முதலாவது விடயம், வட மாகாணசபைத் தேர்தலை

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் முரண்பாடு அம்பலம்: இரு வேறு மேதின நிகழ்வுகள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் காணப்படும் முரண் நிலை மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இடம்பெற்ற இருவேறு மேதின நிகழ்வுகள் ஊடாக பகிரங்கப்படுத்தியிருப்பதாக தெரிய வருகின்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, மேதின நிகழ்வுகளை நடத்துவது தொடர்பிலும் கூட்டமைப்பிற்குள் ஒருமித்த நிலைப்பாட்டினை எடுக்க முடியவில்லை.

இந்த நிலையில் தமிழரசுக்கட்சியின் எதிர்காலத் னண்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் மேதின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் மாவைசேனாதிராஜா, மற்றும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரியநேத்திரன், யோகேஸ்வரன் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர். குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்



அங்கம் பெறுகின்ற ஏனைய கட்சிகளின் முக்கியஸ்தர்கள் எவரும் பங்கெடுக்கவில்லை.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுத்த மேதின நிகழ்வு மன்னாரில் நடைபெற்றுள்ளது. மன்னார் நிகழ்விற்கான ஏற்பாட்டினை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்விற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈபிஆர்எல்எப் கட்சி முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் மற்றும் ரெலோ கட்சியினைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர். குறித்த நிகழ்வில் தமிழரசுக்கட்சியினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பொது முன்னணியாக கட்சியாக பதிவு செய்வதாக ஈபிஆர்எல்எப், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் தமது மத்திய குழுக்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில் தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களுக்கும் ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான விரிசல் நிலை இன்னமும் அதிகரித்திருப்பதன் வெளிப்பாடே குறித்த இரண்டு



நிகழ்வுகளும் என்று நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் ஆயுதக் குழுக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை கட்சியாகப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் எதிர்ப்பினை வெளிப்படுத்தும் என்பதால் கட்சியினைப் பதிவு செய்வது சாத்தியமில்லை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# வெளிநாட்டு தலையீடு இன்றி தீர்வு காண முடியும்- பீரிஸ்



இன முரண்பாடுகளை களைவதற்கு வெளிநாட்டு தலையீடு இன்றி தீர்வு காண முடியும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நாட்டு மக்களிடையே இன ஐக்கியத்தை கட்டியெழுப்ப உள்நாட்டு பொறிமுறைமைகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடு பாதக விளைவுகளையே அதிகம் ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வேறும் நாடுகளின் உள்விவகாரங்கள் குறித்து இலங்கை தலையீடு செய்வதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வது விரும்பத்தகாதது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையுடன் முரண்பாடுகள்: இந்தியா ஓப்புக்கொண்டது!



இலங்கையுடன் சில முரண்பாடுகள் காணப்படுவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இலங்கையுடன் சில விடயங்களில் முரண்பாடு காணப்பட்ட போதிலும் அது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசலை ஏற்படுத்தாது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா தெரிவிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முரண்பாடுகளை களைந்து அர்த்தமுள்ள வகையில் உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியரின் பங்களிப்பு முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். ரயில்பாதை அமைத்தல், தொலைதொடர்பாடல் முறைமையை வடக்கில் உருவாக்குதல், பலாலி விமான நிலைய புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# காணி சுவீகரிப்பு நல்லிணக்கத்திற்கு தடை என்கிறார் சுமந்திரன்

உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டுமாயின் சமூகங்களிடையே அருகிப்போய்விட்ட நம்பிக்கையும் ஒற்றுமையும் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மக்கள் தமக்குச் சொந்தமான வீடுகளுக்கும் காணிகளுக்கும் செல்ல விடாது தடுக்கப்படும்போது நல்லிணக்கம் வரப்போவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பயங்கரமான முயற்சியொன்று கடந்த வாரம் இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு சொந்தமான கிட்டத்தட்ட 6,400 ஏக்கர் விஸ்தீரனமுள்ள காணிகள் சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவ குடியிருப்புக்கள் அமைப்பதற்காக அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் என்று அறிவிக்கும் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழான அறிவித்தல்கள் யாழ்ப்பாண தீபகற்பத்தின் வலிகாமம் வடக்கில் மரங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

இக் காணிகளுக்கான உரிமையாளர்களை காண முடியவில்லையென்று இவ்வறிவித்தல் தெரிவிக்கின்றது. இது ஆச்சரியப்படும் விதமாக இருக்கின்றது.


இக் காணிகளின் உரிமையாளர்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்று கூறப்படும் சட்டத்துக்கு முரணான வலயங்களுக்கு அப்பால் அரசாங்கத்தினாலேயே நிர்வகிக்கப்படும் முகாம்களில் வாழுகின்றனர்.

அவர்கள் அங்கு 25 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றனர். 2006 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் அவர்களுடைய இக் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருப்பினும், கண்ணி வெடி அகற்றல் நடவடிக்கை பூர்த்தியாகவில்லை என்ற பொய்யான வாதத்தினால் அவர்கள் அங்கு சென்று மீளக் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இது பொய்யான வாதமென்பது, எந்தக் காணிகளுக்கு உரிமையாளர்கள் செல்ல தடுக்கப்பட்டார்களோ அதே காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் செய்வதிலிருந்து தெளிவாக புலப்படுகிறது.

தற்போது திடீரென்று அரசாங்கம் தனது உண்மையான முகத்தை காட்டிவிட்டது.

இக் காணிகள் கையகப்படுத்தப்பட்டு, வடக்கில் வாக்காளர்களாக மாறப்போகும் ஏனையவர்கள் அங்கு குடியிருப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படும். இதே போன்ற அறிவித்தல்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் விடுக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில், இராணுவம் தனது நோக்கங்களுக்கு தேவையானதெனக் கருதும்



காணிகள் அனைத்தையும் சுவீகரிக்குமாறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

காணி தொடர்பான பிரச்சினைகளை எப்போதும் தேசிய இனப் பிரச்சனையின் மையமாகத் திகழ்ந்து வருகின்றன. கடந்த காலங்களில், அரசாங்கத்தினால் காணி அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை வன்முறைக்கு வழி வகுத்ததோடு, சமூகங்களிடையே இன உறவு மோசமடைவதற்கும் காரணமாக அமைந்தது.

எனினும், யுத்தத்தை வெற்றிகொண்ட போதும், இலங்கை அரசாங்கம் சமாதானத்தை வென்றெடுப்பதற்காக இந்த வரலாற்றிலிருந்து படிப்பினைகளை கற்றுக் கொள்ள விருப்பமற்றதாக உள்ளதாகவே தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 'துக்ளக்' - 3

இலங்கையில் 'துக்ளக்'

# "தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வார்கள்!"



கடந்த வாரத் தொடர்ச்சி

நமது நிருபர்கள் எஸ்.ஜே. இதயா, ஏ.ஏ. சாமி ஆகியோர், ஆறு நாட்கள் இலங்கையின் பல பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள பல தரப்பினரிடமும் பேசி, செய்திகளைச் சேகரித்து வந்துள்ளனர். இந்த இதழில் யாழ்ப்பாணம் பகுதியில் அவர்கள் பார்த்தவற்றையும், பலரிடம் பேசியவற்றையும் பகிர்ந்து கொள்கிறார்கள்:

இலங்கையின் வட மூலையான யாழ்ப்பாணம், உண்மையில் யுத்தத்தைச் சந்தித்ததா என்று கேள்வி கேட்கும் அளவிற்கு நிலைமை முன்னேறியிருந்தது. பச்சை பசேல் என விவசாயம் நடந்து கொண்டிருந்தது. சாலைகள் பளபளவென இருந்தன. அரசுக் கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. ஹிந்துக் கோவில்களைப் புதுப்பிக்கும் பணிகள் நடந்து கொண்டிருந்தன. புத்தம் புது ஆட்டோக்கள் நகரமெங்கும் குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக் கொண்டிருந்தன. எங்கும் அமைதியாகவும், இயல்பாகவும் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தியேட்டரில் புதுத் தமிழ்ப் படம் (கடல்) ஓடிக் கொண்டிருந்தது. ஆனாலும், ஆங்காங்கே சோகம் இழையோடும் வகையில் போர் நினைவுச் சின்னங்களாக சிதிலமடைந்த பல வீடுகளைப் பார்க்க முடிந்தது.

சாலையெங்கும் புதுப்புது கடைகள் ஏராளமாக இருந்தன. 'போருக்குப் பிறகு வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருந்த இளைஞர்கள் எல்லாம், நாட்டுக்குத் திரும்பி வந்துள்ளனர். அவர்களுக்கு கடல் வேலைக்குச் செல்லும் வாய்ப்புதான் அதிகம். நிறைய வீடு கட்டும் பணி தற்போது நடப்பதால், பலர் கொத்தனார் வேலைக்குச் செல்கின்றனர். வசதி இருப்பவர்களும், வெளியிலிருந்து உறவினர்களின் மூலம் உதவி பெறுபவர்களும் கடை வைக்கிறார்கள். இதனால், பார்க்குமிடமெல்லாம் கடைகளாக இருக்கின்றன. "இவ்வளவு சிறிய பகுதிக்குள் ஐம்பதாயிரம் கடைகள் என்பது ரொம்ப அதிகம். எல்லோரும் கடை வைத்து விட்டால் வாங்க ஆள் வேண்டாமா?" என்றார் ஒரு பெரியவர்.

ஆங்காங்கே ராணுவ வீரர்கள் கண்ணில் பட்டாலும், அவர்கள் எந்த வாகனத்தையும் நிறுத்திச் சோதிக்கவில்லை. யாரையும் நிறுத்தி விசாரிக்கிற மாதிரியும் தெரியவில்லை. "அவர்கள் பாட்டுக்கு அவர்கள் நிற்பார்கள். நாங்கள் பாட்டுக்கு நாங்கள் போவோம்" என்று சாதாரணமாகச் சொன்னார் ஒரு இளைஞர்.

யாழ்ப்பாணம் பகுதியில் சிங்களவர்களைக் குடியமர்த்தியதாக அரசு மீது ஒரு குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. தமிழர்கள் மத்தியில் அது பற்றி விசாரித்தோம். ஒரு சிலர் பொதுவாக அப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்களே தவிர, 'இந்தப் பகுதியில் இத்தனை சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள்' என்கிற வகையில் யாரும் சொல்லவில்லை.

"இங்கு 'தேசிய வளமைச் சட்டம்' என்று ஒரு சட்டம் அமலில் உள்ளது. வட பகுதித் தமிழர்களைத் தவிர, கொழும்புவிலோ அல்லது வேறு தென் பகுதி இலங்கையிலிருந்தோ யாரும் வட பகுதிக்கு வந்து சொத்துக்கள் வாங்க முடியாது. இங்கு கவர்மென்ட் ஏஜென்ட்டாக (கலெக்டர்) ஒரு தமிழர்தான் நியமிக்கப்பட்டுள்ளார். காணி (நிலம்) குறித்த கணக்குகள் அனைத்தும் அவரிடம்தான் உள்ளன. திடீரென யாரும், பல வருட ஆவணங்களை மாற்றி எழுதி விட முடியாது. சிங்களக் குடியேற்றம் சாத்தியமில்லாத விஷயம். புலிகளால் 1983-ல் துரத்தி விடப்பட்ட சில தமிழ் முஸ்லிம் குடும்பங்களிடம் மட்டும்தான், மீண்டும் அவர்கள் நிலம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்றார் யாழ் மாநகராட்சி அதிகாரி ஒருவர்.

யாழ்ப்பாணம் பகுதி ஆர்மி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க எங்களைச் சந்திக்க ஒப்புக் கொண்டார். அவரைச் சந்தித்துப் பேசினோம். "யாழ்ப்பாணத்தில் மட்டுமில்லை. இலங்கையில் எங்குமே முள்வேலி முகாம்கள் இல்லை. போர் முடிந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னுமா மக்களை முகாமில் வைத்திருக்க முடியும்? அவரவர்கள் அவரவர் நிலங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டனர். சாலைகள்,அரசு மருத்துவமனை, அரசு அலுவலகங்கள் எல்லாம் பல கோடி ரூபாய் செலவில் முன்னேற்றம் அடைந்துள்ளன. 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என தெற்குப் பகுதி மக்கள் பொறாமைப்படும் வகையில், வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சிங்களக் குடியேற்றம் என்பது பச்சைப் பொய்.

"பல ஆயிரம் சிங்களக் குடும்பத்தினர் 1983 வாக்கில் விடுதலைப் புலிகளால் இப்பகுதியிலிருந்து துரத்தியடிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மீண்டும் இங்கு குடியேறுவதாக இருந்தால், அவர்களைக் குடியேற்றி வைக்க அரசு தயாராக உள்ளது. ஆனால், சிங்களர் யாரும் இங்கு வந்து குடியேறத் தயாரில்லை. ஆனாலும், சிங்களக் குடியேற்றம் என்ற பொய்யான குற்றச்சாட்டு பரப்பப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களக் குடும்பத்தை அரசு வலுக் கட்டாயமாகக் குடியேற்றி இருப்பதை நிரூபித்தால், நான் இந்த இடத்தை விட்டு உடனே வெளியேறத் தயார்" என்று சவால் விடுத்தார்.

அவரே தொடர்ந்து, "ராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகள்தான் இங்கு இருக்கின்றோம். போர் நேரத்தில் போர் வீரர்களாக இருந்த வீரர்கள் வேறு; தற்போது தேசியப் பாதுகாப்புப் படையினராய் இருக்கும் வீரர்கள் வேறு. மக்கள் எங்களோடு நட்புறவாக இருக்கிறார்கள். குடித்து விட்டு கணவர் அடிக்கிறார் என்று ஒரு பெண் ராணுவத்தில்

(11ம் பக்கம் பார்க்க)

## போரின் சாட்சியங்கள்

இலங்கையில் அமைதி திரும்பி, அபிவிருத்திப் பணிகள் முழு வீச்சில் நடக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. சாலைகள், அரசுக் கட்டிடங்கள், மின்சார நிலையங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு ஃப்ரெஷ்ஷாக காணப்பட்டன. ஆனாலும் அந்த அமைதிக்கு இடையே மெல்லியதாய் ஒலிக்கும் சோக இசை மாதிரி ஊருக்கு ஊர் நிற்கின்றன சிதிலமடைந்த பல வீடுகள். போரின் காரணமாக இடம் பெயர்ந்த யார் யாருக்கோ சொந்தமான வீடுகள், உரிமையாளர் திரும்பி வராததால் சிதிலமடைந்து, கூரை இழந்து, செடி வளர்ந்து பரிதாபமாக நிற்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத் தீவு பகுதிகளில் இப்படிக் கிடக்கும் வீட்டு வெளிச் சுவர்களில் எல்லாம், சல்லடை மாதிரி புல்லட் மார்க்குகள் கடைசிக்கட்ட போரின் சாட்சியங்களாக நிறைந்திருக்கின்றன. ஒரு சில உரிமையாளர்கள் திரும்பி வந்தாலும், தங்களது வீட்டைச் சீர் செய்து கொள்ள நிதி வசதி இல்லாமல் வேறு குடிசைகளில் வசிப்பதாகக் கூறப்படுகிறது. இதுபோன்ற வீடுகள் எல்லாம் ஜன்னல், கதவு, மேற்கூரை ஓடுகள் எதுவுமே இல்லாமல் வெறும் குட்டிச் சுவர்களாக உள்ளன.

அவையெல்லாம் எங்கே என்று விசாரித்தபோது, "போர் முடிந்து திரும்பி வந்த பல குடும்பங்கள் தங்கள் வீடுகளைச் செப்பனிட போதிய பொருளாதார வசதியில்லாமல் தவித்ததால், இப்படி ஆளில்லாமல் கிடக்கும் வீடுகளில் இருந்த தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். சிலர் உரிமையாளர்களின் அனுமதி பெற்று எடுத்தார்கள். சிலர் அனுமதியில்லாமலே களவாடிக் கொண்டனர்" என்று தெரிவித்தார்கள் அப்பகுதி மக்கள். சொந்தமாக ஒரு வீடு கட்டுவ்து ஒவ்வொரு நடுத்தர குடும்பத்திற்கும் இருக்கும் மிகப் பெரிய கனவு. அப்படி கட்டிய வீட்டை விட்டு விட்டு ஓடும் அளவுக்கு காலச் சூழலில் சிக்கிக் கொண்டவர்களின் நிலை பரிதாபமானதுதான்.

## புலிகளால் ஏற்கப்படாத தமிழர்கள்

கிறிஸ்தவ தமிழர்களை ஏற்றுக் கொண்ட விடுதலைப் புலிகள், தமிழ் பேசும் முஸ்லிம்களை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற கேள்வியை இலங்கையில் பல அரசியல்வாதிகளிடம் கேட்டும், சரியான பதில் கிடைக்கவில்லை. இந்தியாவில்தான் ஒரு முஸ்லிம் பெரியவர் அதற்கு எங்களிடம் பதில் சொன்னார். "விடுதலைப் புலிகள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களை மட்டுமே தமிழர்களாக நினைத்தார்கள். அவர்கள்தான் ஈழத் தமிழர்கள்; அவர்களுக்கு மட்டுமே ஈழம் சொந்தம் என்று நினைத்தார்கள். எனவே, இந்திய வம்சாவழியில் வந்த எந்தத் தமிழர்களையும் (அவர்கள் எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்) புலிகள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்ததில்லை.

## ஈழத் தமிழர்களின் விரோதிகள்

'இலங்கைத் தமிழரின் நிலைப்பாடுகள் குறித்த முடிவுகளை எடுக்க வேண்டியது யார் என்ற கேள்விக்குப் பதில் தேடிப் பார்த்தாலே, இலங்கைத் தமிழர் பிரச்னையில் எழும் எல்லா குழப்பங்களுக்கும் விடை கிடைத்து விடும்' என்றார் ஒரு யாழ்ப்பாண பிரமுகர். அவர் வைத்த வாதங்கள் இவை.

"இலங்கைத் தமிழர் குறித்து முடிவெடுக்க வேண்டியது யார்? போருக்குப் பயந்து, உயிர் பயத்தில் வெளிநாடுகளுக்கு ஓடிப் போய், அந்த நாடுகளின் இரக்கத்தில் சொகுசான வாழ்க்கையை மேலை நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களா? அந்தப் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு, தமிழகத்தில் அரசியல் செய்யும் அரசியல்வாதிகளா? இலங்கையின் வரலாறு என்ன, போர்களில் தமிழர்கள் அடைந்த இழப்புகளுக்கு யார், யார் காரணம் என்பதெல்லாம் தெரியாமல், இலங்கை அரசு அழித்த தமிழர்களை விட, தமிழன் அழித்த தமிழர்கள்தான் அதிகம் என்ற உண்மை புரியாமல், தமிழன் என்ற ஒற்றை உணர்வில், அந்தப் பாசத்தில் தமிழகத்தில் போராடும் மாணவர்களா? அல்லது இலங்கையில் தங்கள் சொந்த மண்ணில் வாழும் நாங்களா? இவர்களில் முடிவெடுக்க வேண்டியது யார்?

"சந்தேகமில்லாமல் நாங்கள்தானே? எங்கள் முடிவு என்ன என்பதைத்தானே மற்ற எல்லோரும் ஏற்க வேண்டும்? ஏனென்றால், இங்கு வாழ்வது நாங்கள் தானே? 'வாழ்க்கையை அழித்துக் கொண்டது போதும். இனியேனும் உயிர் தப்பி மிஞ்சியிருப்பவர்கள் தங்களின் மிஞ்சிய வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்க வேண்டும். அதற்கு யார் நல்லது செய்ய முடியுமோ அவர்கள் பக்கம்தான் போக வேண்டும்' என்ற மனோ நிலையில் உள்ள எங்களின் முடிவுக்குத்தானே மற்றவர்கள் கட்டுப்பட வேண்டும்? இங்குள்ள தமிழர் அளித்துள்ள முடிவுகள் என்ன?

"2009 மேயர் தேர்தலில் யாழ்ப்பாணத் தமிழர்கள், ஆளுங்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்குத்தான் மெஜாரிட்டி அளித்தனர். அந்தக் கட்சிதான் யாழ்ப்பாண மேயர் பதவியைக் கைப்பற்றியது. 2010 நாடாளுமன்றத் தேர்தலில், யாழ் மாவட்டத்தில் மூன்று தொகுதிகள் ஆளுங்கட்சிக் கூட்டணியில் இருக்கும் தமிழ்க் கட்சிகளுக்கே கிடைத்தன. வாக்களித்தது எல்லாமே தமிழர்கள்தான்; சிங்களர் இல்லை.

"விடுதலைப் புலிகளால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 2004 தேர்தலில் 23 இடங்களை வென்றது. இறுதிப் போருக்குப் பிறகு நடந்த 2010 தேர்தலில் 14 இடங்களை மட்டுமே வென்றது. கிழக்கு மாகாண சபையையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பால் வெல்ல முடியவில்லை. தமிழர்கள் பெருவாரியாக வாக்களித்த பகுதிகளில் இதுதான் நிலைமை. ஆளுங்கட்சியோடு கூட்டணி வைத்தவர்கள் எல்லாம் தமிழ்த் துரோகிகள் என்றால், அவர்களுக்கு வாக்களித்த ஈழத் தமிழர்களெல்லாம் யார்?

"இங்குள்ள மக்களின் மனோபாவம் தெரியாமல், வெளிநாடுகளில் இருந்து கொண்டு தங்கள் ஆசையை எங்கள் மீது திணிக்க முனைபவர்கள்தான், உண்மையில் ஈழத் தமிழர்களின் விரோதிகள்" என்றார் அவர் ஆவேசமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகைச் சுற்றியதில்

### தொலைக்காட்சிஒளிபரப்பு: அனுமதிகள் ரத்து

ஷியா- சுன்னி பிரிவினையையும் வன்செயல்களையும் தூண்டுவதாகக் கூறி 10 தொலைக்காட்சி சேவைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை இராக்கிய அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது.
இதன் மூலம் இந்த தொலைக்காட்சி சேவைகள் இராக்கில் செயற்பட முடியாது என்பதுடன், அங்கு நடக்கும் நிகழ்வுகள் குறித்து செய்தி சேகரிக்கவும் முடியாது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இராக் எங்கிலும் அவர்கள் சென்றுவரவும் முடியாது.
தடை செய்யப்பட்ட தொலைக்காட்சிகளில் அல்ஜசீரா தொலைக்காட்சியும் அடங்குகிறது. தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அது மறுத்துள்ளது.
இராக்கில் அண்மைய வன்செயல்களில் 200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.
இவை குறித்து கருத்துக் கூறியிருந்த பிரதமர் நூரி அல்மலிக்கி அவர்கள், இராக்கில் ஷியாக்களுக்கும் சுன்னி இனத்தவருக்கும் இடையே வகுப்புவாத வன்செயல்கள் அதிகரித்துவருவதாக எச்சரித்துள்ளார்.

# வங்கதேச கட்டிட விபத்து: பலியானவர் தொகை 400ஐ தொட்டது? பணிகள் மீண்டும் ஆரம்பம்

வங்கதேசத்தில் டாக்காவுக்கு அருகே நடந்த கட்டிட விபத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 400ஐத் தாண்டியிருப்பதாக அதிகாரிகள் இப்போது உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.
இதில் பல டஜன் கணக்கானோர் இன்னும் இடிபாடுகளில் சிக்கியிருக்கின்றனர்.
இதனிடையே, கடந்த வாரம் நடந்த இந்த கட்டிட விபத்தை அடுத்து, பாதுகாப்பு விதிமுறைகளை பலப்படுத்தவேண்டும் என்று கோரி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் டாக்காவின் மையப்பகுதியின் ஊடாக ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.
இந்த கட்டிட உரிமையாளருக்கு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.
கட்டிட உரிமையாளரான, மொஹமது சோஹல் ரானா, திட்ட அனுமதி பெறாமலேயே, இந்த கட்டிடத்துக்கு கூடுதல் மாடிகளைக் கட்டினார் என்று கூறப்படுகிறது. இவரை போலிசார் விசாரித்து வருகிறார்கள்.
இதேவேளை அங்கு மீண்டும் துணி ஆலைகள் முதல் தடவையாக தமது பணிகளை தொடங்கியிருக்கின்றன.
இடிந்துபோன கட்டிடத்தின் உரிமையாளருக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்றும், துணி ஆலைகளில் பாதுகாப்பு தரங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கோரி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



அவர்கள் அனைவரும் வேலைக்கு திரும்ப வேண்டும் என்று வங்க தேச பிரதமர் ஷேக் கசீனா கோரிக்கை விடுத்திருந்தார்.
பணியாளர் பணிக்கு திரும்பாவிட்டால், வணிக நஸ்டம் காரணமாக ஆலை உரிமையாளர்கள் ஆலைகளை மூட நேர்ந்தால், பணியாளர்கள் தமது வேலை யை இழக்க நேரிடும் என்று அவர் எச்சரித்திருந்தார்.
அதேவேளை, இடிந்த கட்டிடத்தில் இடிபாடுகளுக்கு தேடுதல் பணியாளர்கள், மேலும் யாராவது உயிருடன் இருக்கிறார்களா என்று தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

# ஒல்லாந்து நாட்டின் புதிய அரசர் பதவியேற்பு

ஒல்லாந்து நாட்டின் புதிய அரசராக பதவியேற்றுள்ள வில்லெம்-அலெக்ஸாந்தர் நாட்டின் அரசியல் சாசனத்தை நிலை நிறுத்த உறுதிபூணுவதாக தெரிவித்துள்ளார்.
தலைநகர் அம்ஸ்டர்டாமில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வின் போதே அவர் இதை தெரிவித்துள்ளார். அந்த நிகழ்வின் போது தனது தாய்க்கு அவர் புகழஞ்சலி செலுத தினார்.
முன்னதாக அவரது தாய் பியாட்ரிக்ஸ் அரசி முடிதுறப்பு பத்திரங்களில் கையெழுததிட்டார். அவர் 33 வருடங்கள் நாட்டின் அரசியாக இருந்தார்.



இதையடுத்து அவரின் மூத்த மகன் வில்லெம்-அலெக்ஸாந்தர் புதிய மன்னர் பொறுப்பை ஏற்றார்.
புதிய அரசர் பதவியேற்கும் நிகழ்ச்சியை நாடெங்கும் பல பெரிய திரைகளில் கண்டு களித்தனர்.
கடந்த நூறாண்டுகளில் மூன்று அரசிகளுக்கு பிறகு முதல் முறையாக அரசர் ஒருவர் பதவியேற்றுள்ளார்.
புதிய அரசர் பதவியேற்றுள்ளதை கொண டாடும் வகையில் நெதர்லாந்து முழுவதும் கொண்டாட்டங்கள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன.
வில்லெம்-அலெக்ஸாந்தர் புதிய அரசராக பதவியேற்றதை அடுத்து அவரது மனைவியான அர்ஜெண்டினாவில் பிறந்த மாக்ஸிமா அரசியாக அறிவிக்கப்படுகிறார்.
ஹாலந்து மக்களிடையே மிகவும் பிரபலமானவர் மாக்ஸிமா என்பது குறிப்பிடத்தக்கது

## இந்தியச் செய்திகள்

### தாக்குதலுக்குள்ளான சரப்ஜித் சிங்மரணமானார்!

பாகிஸ்தானிய சிறையில் சக கைதிகளால் தாக்கப்பட்ட சரப்ஜித் சிங் அவர் லாகூரில்



உள்ள மருத்துவமனையில் அனுமதிக கப்பட்டிருந்தார்.
கடந்த வாரம் வியாழனன்று அவர் மரண

(11ம் பக்கம் பார்க்க)

# பாமக நிறுவனர் ராமதாசுக்கு 15 நாள் நீதிமன்றக் காவல்

விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம் செய்த பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கைது செய்யப்பட்டு பதினைந்து நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
பாமக தலைவர் கோ க மணி, சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி ஜெ.குருவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
காவல்துறையினர் வன்னியர் நலனுக்கு விரோதமாகச் செயல்படுவதாக குற்றம் சாட்டி விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்தபோது ராமதாஸும் அவரது கட்சித் தொண்டர்களும் கைதாகினர்.
வன்னியர் சங்கம் மாமல்லபுரத்தில் சித்திரை திருவிழா நடத்திய நேரத்தில் மரக்காணத்தில் நடந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பில் ஆயிரத்துக்கும் அதிகமான வன்னியர்களுக்கு எதிராக தமிழக பொலிசார் வழக்கு பதிவுசெய்துள்ளனர் என்றாலும், வன்னியர்கள் தாக்கப்பட்டது குறித்து தமிழக பொலிசார் வழக்கேதும் போடவில்லை என பாட்டாளி மக்கள் கட்சி குற்றம்சாட்டுகிறது.
வன்னியர்களுக்கு எதிராக பொலிசார் பாரபட்சம் காட்டுவதையே இது குறிக்கிறது என்று டாக்டர் ராமதாஸ் இந்த ஆர்ப்பாட்டத்தில் தெரிவித்திருந்தார்.
தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்த குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்டுள்ள டாக்டர் ராமதாஸ், நீதிபதியின் முன்பு ஆஜர்செய்யப்பட்டு பின்னர் பதினைந்து நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப பட்டுள்ளார்.
இதனிடையே, தலித்துகளுக்கு எதிராக பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வன்முறையைத் தூண்டிவருவதாக குற்றம் சாட்டியுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய மார்க்ஸிஸ்ட் கமியூனிஸ்ட் கட்சியினர், மாநிலம் தழுவிய அளவில் மே 8ஆம் தேதி ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.
பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாஸ் கைது செய்யப்பட்டதன் பின்னணியில் ஆங்காங்கே வன்முறைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. திண்டிவனத்தில் இருந்து புதுச்சேரி செல்லும் வழியில் உள்ள பாலம் ஒன்றில் புதனிரவு வெடிகுண்டு வெடித்ததில், பாலத்தில் ஒரு மீட்டர் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவம் நடந்த பகுதியில் இருந்து மேலும் 5 ஜெலட்டின் குச்சிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
திருவண்ணாமலை அருகே கண்டெய்னர் லாரி ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இந்த கண்டெய்னர் லாரி இரு சக்கர வாகனங்களை ஏற்றிக் கொண்டு வந்தது. அதில் சுமார் 50க்கும் மேற்பட்ட புதிய இரு சக்கர வாகனங்கள் இருந்தன. இவை அனைத்தும் தீயில் எரிந்து நாசமாயின.
ஹரியானா மாநிலத்தில் இருந்து கடலூருக்கு புதிய இரு சக்கர வாகனங்களை ஏற்றி வந்த கண்டெய்னர் லாரி திருவண்ணாமலை அருகே உள்ள அத்தியந்தல் ஏரிக்கரை வழியாகச் சென்றபோது, இனந்தெரியாத நபர்கள் சிலர் அந்த லாரி ஓட்டுநர் மீது பெட்ரோல் குண்டுகளை எறிந்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத ..(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் பிரன்ட் ஓ கோனர், கொழும்பு சினமன்ட் கிரான்ட் ஹோட்டலில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

இலங்கை விஜயமானது மிகவும் முக்கியமாக அமைந்துள்ளது என்றும், சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் அவுஸ்திரேலியா செல்வதைத் தடுப்பது குறித்து இலங்கை அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக அவர் கூறினார். அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், பெண்கள், குழந்தைகள், ஆண்கள் என பலர் தமது உயிர்களை பணயம் வைத்து, வீணாகப் பணத்தை செலவழித்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா வருவதையும், கடல் அனர்த்தங்களில் அவர்கள் உயிர்களை விடுவதையும் பார்க்க நாம் விரும்பவில்லை. எனவேதான், ஆட்கடத்தல் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்துள்ளது. சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர் விடயத்தில் காணப்படும் சவால்களை இணைந்து எதிர்கொள்வதற்கு இலங்கையும், அவுஸ்திரேலியாவும் தயாராகவுள்ளது.

சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்களை அவரகளின் சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்த பின்னர் அந்த எண்ணிக்கை கணிசமானளவு குறைந்துள்ளது. சட்ட விரோதப் புகலிடக் கோரிக்கையாளர்களை முற்றாகத் தடுத்து நிறுத்துவதற்கு பிராந்திய நாடுகளின் ஒத்துழை ப்புக்களைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக நுழைபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற தெளிவான செய்தியையும் நாம் கூறிக்கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தெரிவுகளற்ற........... .(6ம் பக்கத் தொடர்ச்சி)

வரை மூடப்பட்டுள்ள தென்னிலங்கை அரசியலை திறப்பதிலும் வரையறைகள் உண்டு. அதேசமயம், திறக்கப்பட்டுள்ள தமிழ் அரசியலைக் கையாள்வதிலும் வரையறைகள் உண்டு. மொத்தத்தில் இலங்கைத தீவில் அனைத்துலக சமூகத்திற்கான தெரிவுகள் மிகவும் சுருங்கிப் போயுள்ளன. அதாவது, புலிகளைத் தோற்கடித்த பின்னரும், அனைத்துலக சமூகமானது கடந்த நான்காண்டுகளாக இலங்கைத்தீவில் தமக்குச் சாதகமான தெரிவுகளை உருவாக்க முடியவில்லை என்று அர்த்தம்

## இலங்கையின் .....(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீது மேலும் அழுத்தங்களை பிரயோகிக்கும் வகைகளை கனடா ஆராய்ந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் யுத்தத்தின் பின்னரான செயற்பாடுகளை முன்னேற்றவும் தமிழ் சிறுபான்மையினரை பாதுகாக்கவும் அழுத்தம் பிரயோகிப்பதற்குப் பதிலாக எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பொதுநலவாய மாநாட்டை நடத்த இலங்கையை அனுமதிப்பதன் மூலம் பொதுநலவாயம், அது முகம் கொடுக்கும் பெரும் பராட்சையில் தவறி வருகின்றது என ஜோன் பயட் கூறியுள்ளார்.

கனேடிய அரசாங்கம், கனடா இந்த மாநாட்டுக்கு போகாதுவிடலாம் என சூசகமாக கூறியுள்ளது.

பொதுநலவாயத்தின் அங்கத்துவ நாடுகள் புறவயத்தன்மை, பரஸ்பர மரியாதை, இறைமையுள்ள நாடுகளின் சமத்துவம் ஆகிய கோட்பாடுகளை நிலைநிறுத்தும் என இலங்கை எதிர்பார்ப்பதாக சித்ராங்கனி தெரிவித்துள்ளார்.

## இனவாதிகள்...(7ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துவது என்பது, ஜனநாயகத்துக்கான போராட்ட த்தில் ஒரு மைல் கல். அதில் பிற்போக்கு இனவாத சக்திகளை முறியடித்து வெற்றிவாகை சூடுவதென்பது பயணத்தின் இரண்டாவது மைல் கல்லாகும். இதைப் புரிந்து கொண்டு செயல்படுவதில்தான், முற்போக்கு சக்திகளின் வெற்றியும், இலங்கை மக்களின் முன்னேற்றமும் தங்கியுள்ளது

## பொதுநலவாய ......(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகிஸ்கரிக்குமாறு கோரி வருகின்றனர்.

பிரித்தானிய மஹாராணி அமர்வில் பங்கேற்றால், பிரித்தானிய பிரதமருக்கு தர்மசங்கடமான நிலைமை ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் நடைபெறும் அமர்வுகளில் கமரூன் பங்கேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு தேவையான நல்லிணக்க முனைப்புக்களை மேற்கொள்ளவில்லை என பிரித்தானிய எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. அமர்வுகளை புறக்கணிப்பதன் மூலம் இலங்கை மனித உரிமை நிலைமைகளை மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது என அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தாக்குதலுக்குள்ளான....(10ம் பக்கத் தொடர்ச்சி)

மானார்.

பாகிஸ்தான் சிறையில் கைதிகளால் தாக்கப்பட்ட நிலையில் மரணமான சரப்ஜித் சிங்கின் கொலைக்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

1990 ஆம் ஆண்டு தொடர்ச்சியாக நடந்த குண்டு வெடிப்புகளில் 14 பேர் பலியானமை குறித்து பாகிஸ்தானிய நீதிமன்றம் ஒன்றினால் இவருக்கு முதலில் மரண தணடனை விதிக்கப்பட்டிருந்தது.ஆனாலும் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பதற்றமடையச் செய்யலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

# இலங்கையில் துக்ளக்........ (9ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து புகார் செய்கிறார். அவர் போலீஸுக்குப் போகவில்லை. குழந்தைக்கு உடல்நலமில்லை என்று ஆம்புலன்ஸுக்குப் ஃபோன் செய்யாமல், எங்கள் கேம்ப்புக்குப் ஃபோன் செய்கிறார்கள் பெண்கள். அவ்வளவு நம்பிக்கை ராணுவத்தின் மீது ஏற்பட்டிருக்கிறது. பல ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் நாங்களே வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம்" என்றும் குறிப்பிட்டார்.

ராணுவமே வீடு கட்டிக் கொடுத்த இடங்களுக்கும், பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுத்த இடங்களுக்கும் சென்று பார்வையிட்டோம். அங்கிருந்த தமிழர்கள், "ராணுவம் உதவியாகத்தான் இருக்கிறது" என்று சொன்னார்கள். ஆனாலும், அவர்களின் தேவை அதிகமாகவே இருக்கிறது. பொருளாதார ரீதியில் அவர்கள் நலிந்து போய் இருக்கிறார்கள்.

"தற்போது இங்கு விடுதலைப் புலிகள் கிடையாது. ஆனால், அவர்களின் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். இங்கு ராணுவ ஆட்சி நடக்கவில்லை. 'தமிழ் தேசியக் கூட்டமைப்பு' (டி.என்.ஏ.) புலிகளுக்கு இணையாக ஆயுதமின்றி இங்கு அரசியல் செய்கிறது. அரசை எதிர்த்து பல அரசியல் கட்சிகள் இங்கு இயங்குகின்றன. சட்டத்தைக் கடைப்பிடிக்கச் செய்யும் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. வெளிநாட்டு அமைப்புகள் வந்த வண்ண முள்ளன. இங்கு பச்சையாகப் பொய் சொல்லி யாரையும் ஏமாற்றி விட முடியாது" என்றார் ஒரு ராணுவ அதிகாரி.

யாழ்ப்பாணத் தமிழ் மேயர் யோகேஸ்வரி, "போருக்குப் பிறகு துரித கதியில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறுகின்றன. புலிகள் காலத்தில் இருண்ட கண்டம் போல் இருந்த யாழ்ப்பாணம், இப்போதுதான் பழைய கம்பீரத்தை மீண்டும் பெற்று வருகிறது. இங்கிருந்து கொழும்பு செல்ல 14 மணி நேரம் ஆகும். இப்போது 7 மணி நேரத்தில் சென்று விட முடிகிறது. வடபகுதியில் 18.6 சதவிகிதமாக இருந்த தமிழ் மக்களை 12.7 சதவிகிதமாக மாற்றியதுதான் புலிகளின் சாதனை. தங்கத் தாம்பாளத்தில் வைத்து இந்தியா அளித்த வாய்ப்புகளை உதாசீனம் செய்து, தங்களையும் அழித்துக் கொண்டு, ஏராளமான தமிழர்களையும் அழித்ததுதான் அவர்கள் கண்ட பலன்.

"இதே யாழ்ப்பாணத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று தமிழ் மேயர்களைக் கொன்று குவித்த இயக்கம்தான் புலிகள் இயக்கம். கிளிநொச்சியிலும், முள்ளிவாய்க்காலிலும் தமிழ் மக்களைச் சந்தித்துக் கேளுங்கள்... போர்க் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் யார் செய்தது எனத் தெரிய வரும்" என்று உணர்ச்சி வசப்பட்டார். மேலும் அவர், "தமிழ் நாட்டில் ஆரம்ப காலம் தொட்டே, இலங்கைப் பிரச்னையை சரியான கோணத்தில் அணுகியவர் துக்ளக் ஆசிரியர் 'சோ'தான். தனி ஈழம் சாத்தியமில்லை என்பதைச் சொன்னதோடு, விடுதலைப் புலிகளால் அழிவு மட்டுமே ஏற்படும் என்று சரியாகக் கணித்தவர் அவர்தான்" என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் பெரிய மருத்துவமனைகளில் ஒன்று யாழ்ப்பாண மருத்துவமனை. அதன் இயக்குனர் சிரிபவானந்தராஜாவை நாங்கள் சந்தித்தோம். "இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் அதிகம். போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் ரீதியான வைத்தியங்கள் எல்லாம் முடிந்து எல்லோரும் அனுப்பப்பட்டு விட்டனர். மன ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் வைத்தியம் தொடர்கிறது. இந்தியாவிலிருந்து மருந்துகளும், உபகரணங்களும் நிறைய வந்தன" என்று கூறினார் அவர்.

மத்திய இலங்கையிலிருந்து வடக்கு நோக்கி, நான்கு வழிச் சாலையைச் சீனாவும், ரயில்வேயை இந்தியாவும் அமைத்து வருகின்றன. மதவாச்சியிலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் 800 மில்லியன் யு.எஸ். டாலர் செலவில் தண்டவாளம் அமைத்து வருகிறது இந்தியா. இதுபோக, 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புத் தரும் வகையில் ஒரு பெரிய தொழிற்பேட்டையும் இந்தியாவின் செலவில் உருவாகி வருகிறது.

ஈ.பி.டி.பி. எனப்படும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை நடத்தி வரும் இலங்கை கேபினட் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, யாழ்ப்பாணத்தில் அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். "ஒரு கட்டத்தில் நானும் ஆயுதம் ஏந்திப் போராடியவன்தான். ஆனால், ஒரு காலகட்டத்தில் தனி நாடு சாத்தியமல்ல; அரசியல் தீர்வுதான் உகந்தது என்ற முடிவுக்கு வந்ததும், அரசியல் பாதைக்குத் திரும்பி விட்டேன். இந்தியா அரசியல் தீர்வுக்கு வழி வகுத்தது. புலிகள் ஏற்கவில்லை. இந்திய அமைதிப்படை இங்கு வந்தது. புலிகள் அதை ஏற்கவில்லை. பிரேமதாச, சந்திரிகா ஆகியோர் அரசியல் தீர்வுக்குத் தயாராக இருந்தார்கள். ஆனால், புலிகள் அவற்றையும் ஏற்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ கூடப் பேச்சுவார்த்தைக்கு இணங்கி வந்தார். அதையும் புலிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

"அரசியல் தீர்வுக்குப் போகலாம் என்று சொன்ன தமிழ்த் தலைவர்கள் அத்தனை பேரையும் 'தமிழ்த் துரோகிகள்' என்று முத்திரை குத்தி கொன்று குவித்தனர் புலிகள். என்னைக் கொல்வதற்கு 12 முறைக்கு மேல் முயன்றனர். என் தம்பி உட்பட எனக்கு வேண்டிய பலர் இதனால் உயிரிழந்தனர். பிடிவாதத்தை மட்டுமே கொள்கையாகக் கொண்டிருந்த பிரபாகரன், தன்னை நம்பிய தமிழ்ச் சமுதாயத்தையும் அழித்து, தானும் அழிந்து போனதுதான் மிச்சம். அவர்கள் ஏராளமான தமிழ்த் தலைவர்களை, அப்பாவி தமிழ் ஜனங்களை மட்டும் அழிக்கவில்லை. தமிழனின் கலாசாரம், தமிழனின் கல்வி, தமிழனின் பொருளாதாரம், தமிழனின் மன நிம்மதி, தமிழனின் மனோதைரியம் அத்தனையையும் அழித்து விட்டார்கள். இன்று இதே தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்டு நாங்கள் பதவியில் இருக்கிறோம்.

"தமிழ் மக்களுக்கு, அரசுடன் இணைந்திருந்து நல்லது செய்வதுதான் விவேகமான செயல். அரசுடன் இருப்பதால்தான் அரசுக்கு அழுத்தம் கொடுத்துக் கொடுத்து, இங்கு ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பல ஹை செக்யூரிட்டி ஸோன்களைப் படிப்படியாக எடுக்கச் செய்திருக்கிறோம். காலம் போக போக, ராணுவம் முற்றிலுமாகத் தள்ளி வைக்கப்பட்டு தமிழ் மக்கள் மிகச் சுதந்திரமாக வாழ்வார்கள். அதில் ஐயம் தேவையில்லை. ஆனால், தமிழ் மக்களுக்காக உழைக்கும் கட்சி என்று கூறிக் கொள்ளும் டி.என்.ஏ., அரசு எடுக்கும் எந்த முயற்சிக்கும் உதவுவது இல்லை. பிறகு எப்படி தமிழ் மக்களுக்கு நல்லது நடக்கும்? வெறும் அரசு விரோதப் போக்கு மட்டுமே இருந்தால், தமிழ் மக்களுக்கு நல்லது நடந்து விடுமா?

"போருக்குப் பிறகு அரசு நியமித்த எல்.எல்.ஆர். கமிட்டி தனது ரிப்போர்ட்டை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. அதன் பரிந்துரைகளை ஆலோசிக்க நாடாளுமன்ற தெரிவுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், டி.என்.ஏ. அதில் பங்கேற்கத் தயாராக இல்லை. தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க வேண்டுமென்றால், இதுபோன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டாமா? தற்போது வட மாகாண சபைத் தேர்தல், இவ்வருட இறுதியில் வர இருக்கிறது. எனவே, தமிழ் மக்களின் இருண்ட காலம் முடிந்து போனது. இனி வசந்த காலம்தான். அதற்கு எங்கள் கட்சி துணை நிற்கும்" என்றார் அவர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நாங்கள் சந்தித்த கங்கா என்ற பஸ் ஆபரேட்டர், நாங்கள் துக்ளக் நிருபர்கள் என்றதும் மிகவும் சந்தோஷமாக எங்களை எதிர் கொண்டார். "உங்கள் ஆசிரியர் சோ இந்திய அரசியலிலும், தமிழக அரசியலிலும் மட்டும் தீர்க்கதரிசியாக இருக்கவில்லை. இலங்கை அரசியல் குறித்தும் தீர்க்கதரிசியாக இருந்தவர். தமிழகமே உணர்ச்சிபூர்வமாக ஈழப் பிரச்னையை அணுகியபோதும், அவர் மிகவும் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துரைத்தார். அதுதான் இன்றைக்குப் பலித்துள்ளது. துக்ளக் ஏட்டை புலிகள் இங்கு வரவிடாமல் செய்து விட்டார்கள். மீண்டும் துக்ளக் இங்கு கிடைக்க ஆவன செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் அவர்.

அதன் பிறகு நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஏ9 நெடுஞ்சாலையில் பயணமானோம். போகிற வழியில், நடைபெற்ற போரின் உச்சத்தையும், இன்னும் இருக்கும் மிச்சத்தையும் சொல்லும் சாட்சியாக அந்தக் காட்சி எங்கள் கண்களில் பட்டது.

தொடரும்

**நன்றி -துக்ளக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## தட்டுப்பாட்டைத் தவிர்க்க மின் உற்பத்தி திட்டம்!

மின்சாரத் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் முக்கிய திட்டமாக தேசிய மின்விநியோக இணைப்பிற்கு 35 மெகாவோட் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் 'ப்ரோட்லண்ட்ஸ்' நீர் மின் உற்பத்தி நிலையமொன்றை உடனடியாக நிர்மாணிக்கவுள்ளதாக மின்வலு, எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

சீன நிதியுதவியுடன் 82 மில்லியன் அமெரிக்கன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி மின் உற்பத்தி நிலையத்திற்கான பிரதேசத்தை கடந்த வாரம் பார்வையிட்டுள்ள அமைச்சர், இந்த மின்சார உற்பத்தி நிலையத்திற்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை அகதிகளை நாடுகடத்தும் பணியை பிரிட்டனும் துரிதமாக்கும்!

Home Office
UK Border Agency

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் பணிகளை பிரித்தானியா துரிதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடத்தப்பட்ட விபரங்கள் வெளியிடப்படாத போதிலும், யுத்த நிறைவினைத் தொடர்ந்து கிரமமான முறையில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆண்டில் 504 பேரும், 2010ம் ஆண்டில் 608 பேரும், 2011ம் ஆண்டில் 865 பேரும், 2012ம் ஆண்டு 717 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். 2013ம் ஆண்டு இறுதியில் நாடு கடத்தப்பட்டவர்கள் தொடர்பான முழு விபரங்கள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கான புதிய இந்திய உயர் ஸ்தானிகராக வை.கே.சிங்

இலங்கைக்கான புதிய இந்திய உயர் ஸ்தானிகராக வை.கே.சிங் இந்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராக கடமையாற்றும் அசோக் கே. காந்தா இந்திய வெளிவிவகார அமைச்சின் கிழக்கு ஆசிய பிரிவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய ராஜதந்திர சேவையில் சிரேஷ்ட அதிகாரியான வை.கே.சிங், தற்போது இந்திய வெளிவிவகார அமைச்சில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு பொறுப்பான செயலாளராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடா பக்கச்சார்பாக செயற்படுகிறது! இலங்கை கண்டனம்!



இலங்கை தொடர்பான கனடாவின் நிலைப்பாடு ஏற்புடையதல்ல என அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனீ வாகீஸ்வரா தெரிவித்துள்ளார்.

கனடா ஒரு பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாகவும் இலங்கைக்கு எதிராக பிழையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் அவர் குறிப்பிடடுள்ளார்.

கனடாவின் நடவடிக்கைகளானது தீய சக்திகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமையக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உறுப்பு நாடுகளின் இறைமைக்கு மதிப்பளித்தல், கூட்டுறவு, ஒத்துழைப்பு போன்ற பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்கு அனைத்து நாடுகளும் மதிப்பளிக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு பொதுநலவாய நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதே மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். கனேடிய வாழ் புலம்பெயர் தரப்புக்கள் உள்ளிட்ட சிலர் இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்துவதில் தீவிரம் காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## இலங்கையின் குற்றச்சாட்டை கனடா நிராகரித்தது!



கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மா நாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக அச்சுறுத்துவதன் மூலம் கனேடிய அரசாங்கம் தீயசக்திகளை பலப்படுத்துவதாக கனடா அரசாங்கத்தின் மீது கனடாவுக்கான இலங் கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனீ வாகீஸ்வரா குற்றஞ் சாட்டியுள்ளார்.

2013ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாட்டை யார் நடத்துவது என்பது தொடர்பாக நாடுகளின் தலைவர்கள் எடுத்த தீர்மானத்தை எதிர்த்து சில தரப்பினர் கருத்துத் தெரிவிப்பது முன்னெப்போதும் நடைபெறாத அதிர்ச்சி தரும் விடயமாகும் என அவர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

ஆனால், கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயட் இந்த விமர்சனத்தை உதாசீனம் செய்துள்ளார். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின்

(11ம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்க முனைப்புக்கள்: கமலேஸ்சர்மா பேச்சுவார்த்தை!

நல்லிணக்க முனைப்புக்கள் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா இலங்கைப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மும்மொழிக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. லண்டனில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் பிரதீபா மஹானாமஹேவா உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் அவர் இந்த சந்திப்பை நடத்தியுள்ளார். மனித உரிமை மேம்பாட்டிற்கு கூடுதல் ஒத்துழைப்பு வழங்கப்படும் என கமலேஷ் சர்மா அந்தச் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து இன மக்களும் கௌரவத்துடன் வாழக்கூடிய வழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மேம்பாடு தொடர்பில் தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதி அனுப்பும் சேவை CARGO SERVICE
உங்கள் நம்பிக்கையைப் பெற்ற
E.A.SHIPPING
9 BIS ROUTE NATIONALE 4 - 77320 BETON BAZOCHES
06 20 60 70 61
நிறை கவனத்தில்

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, இலங்கையின்
எப்பாகத்திற்கும் உங்கள் பொருட்களை நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் அனுப்பித் தருகிறோம்.
விமானச்சீட்டுக்களைப் பெறவும் பொதிகளை அனுப்பவும்
தொடர்புகளுக்கு : 06 20 60 70 61 ஜெகநாதன்
CEYLON SHIPPING LINES LTD
760, Dr.DANISTER DE SILVA MAWATHA - COLOMBO 09 - T.P:0112680301/0112680310



PRINTED BY MULTI LINES ADVERTISING (PVT) LTD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org